Registered as a news paper.    பக்கங்கள்: பன்னிரண்டு    விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 13 (01.08.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :303

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்



இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சீ/2494)

## இராணுவப் புலனாய்வுத்துறை முக்கியஸ்தரான

# புளொட் மோகன் நேற்றுக் காலை

# பம்பலப்பிட்டியில் சுட்டுக்கொலை!


## மோட்டார் சைக்கிளில் வந்தோர் கைவரிசை

(கொழும்பு)

கொழும்பு நகரில் பம்பலப்பிட்டி டுப்ளிகேசன் வீதியில் வைத்து இராணுவப் புலனாய்வுத்துறை முக்கியஸ்தரான புளொட் மோகன் நேற்றுக்காலை 11.20 மணிக்கு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

டுப்ளிகேசன் வீதியிலுள்ள விற்பனை நிலையம் ஒன்றுக்கு ஓட்டோ ஒன்றில் சென்று இறங்கியபோதே சனசந்தடி மிக்க இடத்தில் வைத்து இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களே இவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.





...க பிஸ்டல் துப்பாக்கியைப் பயன்படுத்தியே ...து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்- இதனால் ...ந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் ...

...கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட புளொட் மோகன் அம்பாறை ...

## இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புடையவரே புளொட் மோகன்!

### திலக் ரணவிராஜா ஒப்புக்கொள்கிறார்

(கொழும்பு)

கொழும்பு நகரில் பம்பலப்பிட்டி டுப்ளிகேசன் வீதியில் வைத்து நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்ட 'புளொட் மோகன்' இராணுவப் புலனாய்வுத் துறையுடன் தொடர்புடைய முக்கியஸ்தர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு அமைச்சர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

புளொட் மோகன் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்தே இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புடையவர் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

பம்பலப்பிட்டி டி.ஆர்.ஏ.டி மெல்மா வத்தையிலுள்ள விஜிர வீதிச் சந்தியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப்புலிகள் காரணமாக இருக்கக் கூடும். ஆனால், புலிகள் தான் காரணமென உறுதியாகக் கூறமுடியாது.

இத்தகைய கொலைச் சம்பவங்கள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொல்லப்பட்ட புளொட் மோகனுடன் படையினருக்கு தொடர்பில்லையாம்!

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு - பம்பலப்பிட்டி டுப்ளிக்கேசன் வீதியில் வைத்து நேற்றுக் காலை 11.20 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் மோகனுக்கு இராணுவத்துடன் எந்த விதத்தொடர்பும் இல்லையென்று, இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

புளொட் மோகன் இராணுவப் புலனாய்வுத்துறையுடன் நெருக்கமான தொடர்புடையவர் என வெளி... வெளியிட்டபோதே அவர், புளொட் மோகனுடன் இராணுவத்துக்கு எந்தத் தொடர்புமில்லை என நிராகரித்தார்.

எனினும், பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா நேற்று இந்தச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்டபோது - புளொட் மோகன் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புடையவர் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்...

சிற யு ுக பிஸ்டல் துப்பாக்கியைப் பயன்படுத்தி
இவர் ம து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்- இதனால்
அவர் அ ுந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும்
தெரிவிக்க ப்படுகிறது. இவரது உடலில் எட்டு துப்பாக்
கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக பொலிஸார்
தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட புளொட் மோகன் அம்பாறை சென்றல் காம்பைச் சேர்ந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

புலனாய்வுத்துறையுடன் நெருக்க மான தொடர்புடையவர் என வெளி யான செய்திகள் குறித்து கருத்து

பிரிவுடன் தொடர்புடையவர் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக் கது.

# உட ன் பேச்சுக்களை ஆரம்பிக்க அமெ ரிக்க அரசு வேண்டுகோள்!

(கொ ழும்பு)

இலங்கை அரசாங்கமும் - விடுத லைப்புலிகளும் உ டனடியாகப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க முன் வர வேண்டுமென அமெரிக்கா வேண்டு கோள் விடுத்துள் ளது.

தெற்காசிய வி காரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதி இராஜா ங்கச் செயலர் டொனால்ட் காம்ப் இந்த வேண்டுகோளை விடுத துள்ளா

இலங்கைக்கான இரண்டு நாள் விஜயமாக கொழும்பை வந்தடைந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# புளொட் மோகன் கொலைக்கு அரசு க ண்டனம் தெரிவிப்பு!

(கொழும்பு)

ட்டியில் நே நற்று இடம்பெற்ற ளொட் மோகன் கொலையை கை கண்டிப் பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. எதிர்த தரப்ப ரைக் கொலை செய்யும் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளை அரசாங்கம் வன்மையாக ங் கண்டிப்பதாக, அரசாங்கத் தகவல் திணைக் களம் நேற்று வெளியிட் ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால், தற்போதுள்ள சமாதான அமைதிச் சூழலுக்குப் பாதகம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் ச ம்பவம் சமாதான முயற்சிகளில் பாதிப்பை ஏற் படுத்தும் எனவும், தகவ ல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

# 12 ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம் கிடைக்கும்!

## யாழ். அரச அதிபருக்கு திறைசேரி உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பில் முதலாவது கட்டமா கவே 17ஆயிரம் பேருக்கு நியம னங்கள் வழங்கப்பட்டதாகவும், மேலும் 12 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிய மனம் வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருவதாகவும் இது தொடர் பான பெயர்ப் பட்டியல் விரைவில் வெளியாகுமெனவும் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் நேற்று விடுத்த அறிக்கையில் கூறியுள் ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

'வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது சம்பந்தமாக யாழ் மாவட்டத்தில் பல பட்டதாரி கள் தங்களுக்கான நியமனம் இது வரை வழங்கப்படாததால் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர் பாக நேற்று திறைசேரி முகாமைத் துவப் பிரிவின் உத்தியோகத்தரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட் டது.

இது தொடர்பாக ஏற்கனவே (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு நகரத்தில் மீண்டும் சோதனை சாவடிகள் அமைப்பு!

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத்தின் சில முக்கிய இடங்களில் தற்காலிக சோதனைச் சாவடிகளை அமைப்பதற்கு பொலிஸார் தீர் மானித்திருப்பதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

பம்பலப்பிட்டியில் நேற்று நண்பகல் புளொட் மோகன் சுட்டுக் கொல்லப் பட்ட சம்பவத்தை அடுத்தே, இந்த உடனடி அவசர நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டது.

மேல் மாகணத்தில் வடக்கு, தெற்குப் பிரதேசங்களில் இந்த சோத னைச் சாவடிகள் அமைக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies

# திருக்குறள் வினாடி-வினா போட்டி நடத்த ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா நினைவாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் திருக்குறள் வினாடி வினாப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை சார்பாக தரம் 12,13 வகுப்புக்களைச்சேர்ந்த மூவர் கொண்ட குழு இந்தப்போட்டியில் பங்குபற்றலாம். ஒழிபியலில் முதல் பத்து அதிகாரங்களை உள்ளடக்கியதாகப் போட்டி அமையும்.

போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 10 திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிகளின் முதற்கட்டம் - எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதியும், இறுதிப்போட்டி செப்ரெம்பர் 3 ஆம் திகதியும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பாடசாலைகளுக்கும், அதிகூடிய புள்ளிகளை ஈட்டும் மூன்று மாணவர்களுக்கும் செப்ரெம்பர் 10 ஆம் திகதியன்று இடம்பெறும நிறுவுநர் நாள் விழாவில் மிகப்பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கான நியமனங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று தீவுப்பகுதிக்கான கூட்டம் வேலணை வங்களாவாடிச் சந்திமணி கல்வி நிலையத்தில் காலை 11 மணிக்கு இடம்பெறும்.

தென்மராட்சிப் பகுதிக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு சாவகச்சேரி நியூறோயல் கல்வி நிலையத்திலும், வடமராட்சிப் பகுதிக்கான கலந்துரையாடல், நெல்லியடி கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் மாலை நான்கு மணிக்கும் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். நகரில் திருடப்பட்ட சைக்கிள் குருநகரில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சில தினங்களுக்கு முன் யாழ். நகரப் பகுதியில் காணாமற்போன துவிச்சக்கர வண்டி ஒன்று நேற்று குருநகர் பகுதியில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த நான்கு தினங்களுக்கு முன்பு யாழ் நகரப்பகுதியில் காணாமற்போன துவிச்சக்கரவண்டி ஒன்று குருநகர்ப் பகுதியிலுள்ள கடையில் விற்பனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது குறித்த தகவல் பொலிஸாருக்கு கிடைத்ததையடுத்து அந்தத் துவிச்சக்கர வண்டி பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இந்த துவிச்சக்கர வண்டியைத் திருடியவர் என்ற சந்தேகத்தின் பெயரில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உயர் தேசிய கணக்கியல் மற்றும் வர்த்தக டிப்ளோமாதாரிகளுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு உயர் தொழில்நுட்பக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதால், பட்டம் பெற்று வெளியேறிய அனைத்து டிப்ளோமாதாரிகளையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல் வர்த்தக டிப்ளோமாப் பட்டதாரிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

## 150 ஆவது ஆண்டு நிறைவு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய 150 ஆவது ஆண்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

இதில் விழாத் திருப்பலி யாழ். ஆயர் தலைமையில் இடம்பெறும்.

## ஆன்மீக சொற்பொழிவு

(வடமராட்சி)

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆசிரமத்தில் ஞாயிறு தோறும் நடைபெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் 'பெரிய புராணத்தில் பக்தி' என்னும் பொருள் பற்றி கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி ஆசிரியை கல்யாணி நமசிவாயம் சொற்பொழிவு நிகழ்த்துவார். (17)


வெற்றிடங்கள்

27 வருடங்களாக இயந்திர தயாரிப்பில் முன்னோடியாக விளங்கும் எமது ஸ்தாபனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1. உருக்கிணைப்பாளர்கள் (Arc Welders & Tig Welders)
2. பொருத்துனர்கள் (Fitters)
3. பப்ரிகேட்டர்ஸ் (Fabricators)
4. தகட்டு வேலையாட்கள் (Sheet Metal Workers)

மேற்படி வெற்றிடங்களுக்கு சுயமாக சிந்தித்து செயற்படும் ஆற்றலுள்ள உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அனுபவமுள்ள் தரமாக வேலை செய்வதில் ஆர்வமுள்ள தொழிலாளர்கள் தேவை.

கல்வித்தகமை: தேசிய தொழில் பயிலுனர் சபை சான்றிதல்கள் / தேசிய தொழில்நுட்பக் கல்லூரி சான்றிதல்கள் பெற்றிருந்தால் நலம்.
அனுபவம்: குறைந்தது 5 வருடங்கள்.

திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

மேற்படி வெற்றிடங்களுக்கு நற்சாட்சி விபரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர் விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக இயக்குனர்
புறோமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிடெட்
844 பருத்தித்துறை வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/2797)



நிறஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
ஜூனியர் சிவாஜி துஷ்யந்தன், சுபா, பூஜா நடித்த
சக்தி
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)
saving private Ryan
(சி-2723)



நாகம்ஸ் சுன்னாகம்
சிம்பு, ரம்யா, கருணாஸ் மனோரமா நடித்த





குத்து
நிகழ் முதல் ரஜினிகாந் நடித்த பாட்ஷா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)



ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன், மீனா, நெப்போலியன், சீலண்ணன் நடித்த





அன்புசகோதரன்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2725)



எமது சிறார்களின் ஆங்கில அறிவையும் கல்வித் திறமைகளையும் நேரில் பார்வையிட ஒரு அழைப்பிதழ் !!

260 பாலர் பாடசாலை சிறார்களும் 270 ஆங்கில பாடசாலை சிறார்களும் பங்கு பெறும் ஆங்கில மொழி மூலமான மெகா விழா

BRITISH BUSINESS SCHOOL
பாலர் பாடசாலை சிறார்களும் ஆங்கிலப் பாடசாலை சிறார்களும் தங்கள் திறமைகளை
Saturday 14th August 2004 அன்று
English Day & Concert
மூலம் தமது பெற்றோருக்கும் நலன் விரும்பிகளுக்கும் காண்பிக்க இருக்கின்றார்கள்.

இடம் வீரசிங்கம் மண்டபம், யாழ். யாழ்ப்பாணம்.

நேரம் காலை 9.00- பி.ப 1.0 (யாழ் சிறார்க
பி.ப 2.00- மாலை 6.00 (வடமராட்சி சிறார்





பொது மக்கள் குறிப்பாக தங்கள் பிள்ளைகளை எமது பாலர் பாடசாலைகளிலும் ஆங்கில வகுப்புக்களிலும் சேர்க்க விரும்புவோர்களை அன்புடன் அழைக்கின்றோம். எங்கள் பாடசாலைகளின் கற்கைத்தரத்தை அறிய இது ஒரு அரிய வாய்ப்பு.

ஆவணியில் ஆரம்பம்

பாலர் பாடசாலை வகுப்புக்கள்
- ஆங்கில மொழிமூலம்
- தமிழ் ஒரு கட்டாய பாடம்
- 2+ முதல் 5+ வரை

சிறுவர்களுக்கான ஆங்கில வ
(5+ - 14+ வரை) Level 1

சிறார்களுக்குக்கான CAMBRIDGE சர்வதேச ஆங்கி
BRITISH COUNCIL இனால் யாழ் நகரில் நடா

The Peninsula's English Academy

BRITISH BUSINESS SCHOO
யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
வடமராட்சி: பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டி, புலோலி.
HOT LINE : 021-222-5796

## இரண்டு வருடகாலத்துக்குள் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்புத் திட்டத்தின்கீழ், தற்போது பயிற்சியின் பொருட்டு சேர்த்துக்கொள்ளப்படும் அனைத்து பட்டதாரிகளும் இரண்டு வருடகாலத்துக்குள் அரச திணைக்களங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென, அமைச்சர் என்றரீதியில் வாக்குறுதியளிப்பதாக நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்ட அறிக்கைக்கு அமைய நிரப்பப்படாமல் இருந்த வெற்றிடங்களை, நிரப்பும் வகையிலேயே அனைத்துப் பட்டதாரிகளும் பயிற்சியின் பொருட்டு, இணைத்துக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்த அவர் - பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் படமாட்டாதென சிலர் குறிப்பிடுவதற்கு செவிமடுக்க வேண்டாமெனப் பொதுமக்களிடம் தான் கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## எழுத்துமூல உடன்பாட்டை ஜனாதிபதி வழங்கவேண்டும்

### கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது மந்த நிலையிலிருக்கும சமாதானப் பேச்சுவார்த்தை, விடுதலைப் புலிகள் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையிலேயே ஆரம்பிக்கப்படவேண்டும்.

இவ்வாறு அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலர் டொனால்ட் ஏகோமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இருவரும் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியபோது தெரிவித்ததாக, நேற்று முன்தினம் இரவு பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக, ஜனாதிபதி ஒரு தெளிவான முடிவை எடுக்கவேண்டும். ஏனெனில், அவரது அமைச்சரவையில் இருக்கின்ற சிலரும் அவருடைய அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பியும் இடைக்கால நிர்வாக அதிகார சபையை அடிப்படையாக வைத்து, பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதை முழுமையாக எதிர்க்கின்றன.

ஆனால், ஜனாதிபதி இடைக்கால நிர்வாகசபையை அடிப்படையாக வைத்துப் பேசலாம் எனத் தெரிவிக்கின்றார். எனவே, இவ்வாறான முரண்பாடான விடயம் இருக்கின்ற காரணத்தால், இதனை ஜனாதிபதி எவ்வாறு சமாளிக்கப்போகின்றார் என்பதை நாம் ஏகோமுக்குத் தெளிவுபடுத்தினோம்.

இடைக்கால நிர்வாக சபை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விருப்பமாக இருந்தால், எழுத்துமூலமான உறுதிப்பாட்டை ஜனாதிபதி விடுதலைப் புலிகளுக்கு வழங்க வேண்டும் எனவும் ஏகோமுக்குத் தெளிவுபடுத்தினோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எம்மை, கடந்த மாதம் சந்தித்த ஜனாதிபதி எம்மிடம் அப்போது தெரிவித்த கருத்துக்களுக்கு எதிராக இரண்டு தினங்களின் பின் மாற்றிக் கொண்டார். அத்துடன், கிழக்கில் இடம்பெறும் சம்பவங்களை அரசாங்கம் கட்டுப்படுத்தவேண்டுமெனவும் அவருக்குத் தெளிவுபடுத்தினோம்.

எனினும் - அமெரிக்க அரசாங்கம், சர்வதேச சமூகம் என்பன தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இதற்குப் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்படவேண்டும், சமூகங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடென ஏகோம் தம்மிடம் தெரிவிததாக பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார்.

## பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் மாணவர்கள் அனுமதிக்கும் தொகை அதிகரிக்கப்படவுள்ளது.

மொரட்டுவ, சிறிஜெயவர்த்தனபுர, களனி ஆகிய பல்கலைக்கழகங்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக விஞ்ஞான பாடநெறிகளுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்கள் தொகையை 390 ஆல் அதிகரிக்கவுள்ளன.

இதற்கான நிதியை வழங்க திறைசேரி அனுமதியளித்துள்ளது.

இதேவேளை - அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் மாணவர்களின் தொகையை அதிகரிக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

பலகலைக்கழக மானிய ஆணைக் குழுவும், கல்வி அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட விசேட குழுவும் இந்தத் திட்டத்தைத் தயாரித்துள்ளன.

## இடைக்கால நிர்வாகத்தை எதிர்த்து ஜே.வி.பி பிரசாரம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை ஆலோசனையை அடிப்படையாகக்கொண்டு, சமாதானப்பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி தயாராவாரேயானால், அதற்கு எதிராகப் பொதுமக்களை ஒன்று திரட்டி, நாடு முழுவதும் முக்கிய கருத்துக்களை நடத்துவதற்கு ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

இடைக்கால நிர்வாகசபை ஆலோசனைகளின் அபாய நிலவரம்பற்றிப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்துவது, இந்தக் கருத்தரங்குகளின் நோக்கமாகும் எனக் கூறப்பட்டுள்ளது..

உண்மையான சமாதானத்தின் எதிரிகள் யார்? ஒகஸ்ட் என்றதொனிப் பொருளின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பரப்புரைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் இந்தத் தொடர் கருததரங்குகள் - காலி, கண்டி, பதுளை, தங்காலை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, குருநாகல், அநுராதபுரம் ஆகிய நகரங்களில் நடைபெறுவதோடு, ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தனகுணதிலக மற்றும் அமைச்சர் அநுரகுமார திஸநாயக்கா ஆகியோர் இதில் பங்கேற்கவுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு, சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது, விடுதலைப் புலிகளின் உபாயமார்க்கம் என சந்தேகிப்பதாகவும், அதன்மூலம் நாட்டைப் பிரிக்கும் நோக்கில் அவர்கள் பயணிப்பதாகவும், ஜே.வி.பி கருத்து வெளியிட்டுள்ளது.

## ஐக்கிய தேசியக் கட்சி - புலிகள் மீது ஈ.பி.டி.பி வழக்குத் தாக்கல் செய்யுமாம்

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் தங்களை நிராயுதபாணிகளாக்கி, தமது பாதுகாப்பை இல்லாமல் செய்து, தம்மை ஆபத்து நிலைக்குள்ளாக்கியமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக ஈ.பி.டி.பி உட்பட நான்கு அரசியல் கட்சிகள் நீதிமன்றத்தில் வழக்குத் தாககல் செய்யத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே அரசாங்கத்தின் அதிகாரிகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களும் இதில் எதிராளிகளாகக் குறிப்பிடப்படவுள்ளனர்.

கடந்தகால அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே கையொப்பம் இடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் 1:8 சரத்துக்கு அமைய தங்கள் அமைப்புக்களின் தலைவர் களது பாதுகாப்புக்கென இருந்த ஆயுதங்களைப் பெற்றுக்கொண்ட தன்மூலம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இந்தக் கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைகள் வழக்கைத் தாக்கல் செய்வதற்கு ஆயத்தமாவதோடு, கட்சிச் சட்டவாளர்களோடும் கலந்துரையாடல்கள் இடமபெற்றதாகவும் தெரியவருகிறது.

போர்நிறுத்த ஒப்பந்தம் கையொப்பமிட்ட பின்னர் ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), ஈரோஸ் ஆகியவற்றின் உறுப்பினர்கள் 225 பேர், தமிழீழ விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்டதாகவும் அதில் 36 பேர் ஈ.பி.டி.பி அமைப்பின் பிரதேசத் தலைவர்கள் என்றும், அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் நெல்சன் எதிரிசிங்க தெரிவித்தார்.

இதுவரை தமிழ் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் பொருட்டு, இரு தரப்புக்கும் இடையே நடுநிலையாளர்களாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோர்வே விசேட சமாதானப் பிரதிநிதிகள் குழுவினர் செயற்படவில்லையெனவும் ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட கடந்தகால அரசின் சமாதானப் பிரதிநிதிகள்குழு, தமிழீழ விடுதலைப் புலிகளின தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட சமாதானப் பிரதிநிதிகள் இதன்போது பொறுப்புச் சொல்லவேண்டியவர்க ளாக பெயரிடுவதற்கு ஆயத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை போர்நிறுத்த ஒப்பந்தம் சட்டவிரோதமானது என்று- ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பன உயர் நீதிமன்றத்தில் வழக்குத தாக்கல் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (தே)

## மனோ - மலிக் குழுவினரின் பேச்சுக்கள் மீள ஆரம்பமாகும்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியோடு உடன்பாட்டுக்கு வரும் வகையில், ஜனாதிபதி சந்திரிகாவின் கவனம் திரும்பியுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோதித்தவெலவுக்கும் - மலிக் சமர விக்கிரமவுக்கும் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிபபதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்றால், அது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோடு பேச்சு நடத்துவது அவசியம் என, அமைச்சர்களும் மற்றும் நாடாளுமன்றக் குழுவினரும் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

நாட்டின் இனப்பிரச்சினை விடயத்தில் முக்கியமான தீர்வை எடுக்கும்போது, எதிர்க்கட்சிகளின் வரிசையில் முக்கியமான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோடு பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது அவசியம்.

குறிப்பாக - இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜித சேனாரத்ன இடைக்கால நிர்வாக அலகு பற்றிப் பேச்சு நடத்துமானால், நிபந்தனை எதுவுமின்றி அரசுக்கு ஆதரவு வழங்குவோம் எனக் கூறியதை அரசு கவனத்தில் எடுத்துள்ளது.

இவறறைக் கவனத்தில் கொண்டே மனோ - மலிக் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. (தே)

## இலங்கையர்களின் கண்களுக்கு யுரேனஸ், நெப்ரியூன் கோள்கள்

(கொழும்பு)

யுரேனஸ், நெப்ரியூன் ஆகிய கோள்களை, இலங்கையில் இருப்போர் தற்போது தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு வானத்தில் இரவு 10 மணிக்குப் பின்னர் இந்த இரு கோள்களும் தெளிவாகத் தெரியும்.

வானியல் நிபுணர்களால் மாத்திரமே, தமது கண்களால் அவற்றை இனம்காணமுடியும். சாதாரணமக்கள் தொலைநோக்கி மூலமே இவற்றைப் பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கொட்டாவ சம்பவத்தின் கொலையாளிகளை கண்காணிப்புக்குழு மூலம் கைதுசெய்வோம்

### பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொட்டாவ இல்லத்தில் வைத்து எண்மரைச் சுட்டுக்கொலை செய்தவர்கள் எனச் சொல்லப்படும் சந்தேக நபர்கள் இருவருமே இந்த கொலையைச் செய்தார்கள் என்பது சாட்சியங்கள்மூலம் உறுதிப்படுத்தப்பட்டால், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின்மூலம் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட எட்டுப் பேருடனும் தங்கியிருந்த இருவருமே, இந்தக் கொலைகளைச் செய்தார்கள் என்பது இதுவரை உறுதியாகத் தெரியவரவில்லை. ஆனால், அவர்களுடன் தங்கியிருந்த இருவருமே மற்றவர்களைச் சுட்டுக் கொன்று விட்டு, தம்மிடம் சரண் அடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

எனினும், விசாரணைகளின் முடிவில், சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டி ஏற்படுமிடத்து, புலிகளிடம் சரணடைந்துள்ள இருவர் குறித்தும் தேவையான நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## சமாதான செயற்பாட்டுக்கு ஆதரவாக சந்திரிகா - ரணில் இடையே உடன்பாடு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்து, அதனை இறுதி அரசியல் தீர்வுவரை முன்னெடுத்துச் செல்வதன் பொருட்டு, ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையே உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு இரு தரப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடைக்கால நிர்வாக ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு, மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பது நிபந்தனையாகவுள்ளது.

இதனால், தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு, இடையில் நின்றுபோயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் உடன்பாடொன்றுக்கு வந்துள்ளதாக அரசாங்கத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலகிசன் - இருவரையும் தனித்தனியாகச் சந்தித்தபோது இதுபற்றி தெரியப்படுத்தியுள்ளனராம்.

இதன் பொருட்டு சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நிபந்தனைகள் இன்றி அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க, ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையேயான கலந்துரையாடலொன்று, அடுத்த வாரத்துககுள் இடமபெறும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)


### ஆடிவேல் வீதியுலா

நல்லூர் ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தான வருடாந்த ஆடிவேல் வீதியுலா நாளை ஆரம்பமாகி, தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்தப் பவனி வழமைபோல் யாழ நகர் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் நடைபெறும்.

# இன்றைய இறுதிப் போட்டியில் இலங்கையை வீழ்த்துவோம்!

## இந்திய அணித் தலைவர் கங்கூலி கூறுகிறார்






இலங்கை அணிக்கு எதிராக இன்று நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண இறுதிப்போட்டியில் இந்திய அணி சிறப்பாக ஆடும் என்றும், கடந்த இரண்டு வருடங்களாக இந்திய அணி இறுதிப்போட்டிகளில் சிறப்பாக ஆடிவருகின்றது என்றும் அந்த அணியின் தலைவர் கங்கூலி தெரிவித்தார்.

இறுதிப்போட்டியில் இன்று இலங்கையை எதிர்கொள்வதற்கு இந்திய வீரர்கள் மனதளவிலும் உடலளவிலும் 100 சதவீதம் தயாராக உள்ளனர். வி.வி.எஸ்.லக்ஷ்மன் முழுமையாகக் குணமடைந்து விட்டார். இன்றைய போட்டியில் அவர் ஆடுவார்.

இறுதிப்போட்டிகளில் அவுஸ்ரேலிய அணியை எதிர்த்து ஆடிய சந்தர்ப்பங்களில் மட்டும்தான் இந்திய அணி தோல்வியடைந்திருக்கிறது. அந்த அணிதான் தற்போது நம்பர் 1 அணியாகத் திகழ்வதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சொந்த மண்ணில் இலங்கை அணி கூடுதல் பலத்துடன்தான் ஆடும். அதுதவிர இறுதிப்போட்டிக்கான இலங்கை அணியில் முத்தையா முரளிதரனும் சமிந்தவாஸும் இடம்பெறுகிறார்கள். முழுமையான அணியாக இலங்கை இறுதிப்போட்டியில் இறங்கவுள்ளது.

முரளிதரன் மற்றும் வாஸ் ஆகியோரின் வரவு குறித்து நாங்கள் கவலைப்படவில்லை. அவர்களை இப்போதுதான் முதன்முறையாக நாங்கள் எதிர்கொள்ளவில்லை. அவர்களுடைய பந்துவீச்சை எதிர்கொண்டு ஆடிய அனுபவம் எங்கள் எல்லோருக்கும் இருக்கிறது.

இலங்கையில் சொந்த ஆடுகளங்களில் அவர்கள் வலிமையாகத்தான் காட்சியளிப்பார்கள். ஆனால், இதற்கு முன்னர்கூட இலங்கையில் வைத்து அந்த அணியை வீழ்த்தியிருக்கிறோம். இம்முறையும் அப்படியே நடக்கும் என்று கங்கூலி நம்பிக்கை தெரிவித்தார்.

# இந்திய அணியின் வெற்றிக்கு உதவவேண்டுமென விருப்பம்!

## இர்பான் பதான் கூறுகிறார்

இறுதிப் போட்டி என்பது முக்கியத்துவம்வாய்ந்த ஒன்று. இன்றைய போட்டியில் நான் சிறப்பாக ஆட விரும்புகின்றேன். கூடுதல் முயற்சியுடன் பந்து வீசி அணியின் வெற்றிக்கு உதவவேண்டும் என்பதே எனது விருப்பம் என்று தெரிவித்திருக்கிறார் இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் இர்பான் பதான்.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இதுவரை 12 விக்கெட்டுகளை வீழ்த்தி விக்கெட்டுகளின் எண்ணிக்கையில் முதலிடம் வகித்துவருகிறார் இர்பான் பதான்.

இந்தத் தொடரின் பிரதான வேகப்பந்து வீச்சாளர்களான சொகைப் அக்தர், முகமது சமி மற்றும் சமிந்த வாஸ் ஆகியோருடன் இர்பான் பதான் ஒப்பிடப்பட்டு வருகிறார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இதுபோல ஒப்பிட்டுப் பாராட்டுவது கூடுதல் பளுவைத் தருகிறது. என்னுடைய தற்போதைய எல்லை எது என்பது குறித்து நான் தெளிவாக இருக்கிறேன்.

இலங்கை அணிக்கு எதிராக 49 ஆவது ஓவரை வீசி, அந்த ஓவரில் நான்கு ஓட்டங்களை நான் கொடுத்தேன். அந்த ஓவர்தான் எனக்கு இந்தத் தொடரிலேயே திருப்தியும், மகிழ்ச்சியும் அளித்த ஓவர். இறுதிப் போட்டியிலும் அதேபோல் சிறப்பாக பந்துவீச வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

ஒருநாள் போட்டிகளில் அதிகமாக பரிசோதனை முயற்சிகளில் ஈடுபடமுடியாது. இலங்கை அணிக்கு எதிரான அந்தப் போட்டியில் ஒரு பந்து கூடுதலாக வீசியிருந்தால்கூட நிலைமை மாறியிருக்கும். நமது பரிசோதனை முயற்சியில் ஒரு பந்து பவுண்டரிக்குப் போயிருந்தாலும் போட்டி கையை விட்டுப் போயிருக்கும்.

ஏனெனில் அப்போது இலங்கை அணியின் வெற்றிக்கு சொற்ப ஓட்டங்கள்தான் தேவைப்பட்டன.

எந்த ஒரு துடுப்பாட்ட வீரரையும் மிகப் பெரியவர் என்றோ அல்லது மிகச்சிறியவர் என்றோ எடைபோட்டுவிடமுடியாது.

இளம் பந்துவீச்சாளர்கள் இந்த விஷயத்தில் அவதானமாக இருக்க வேண்டும். இது என்னுடைய இந்தக் குறுகியகால கிரிக்கெட் அனுபவத்தில் நான் கற்றுக்கொண்டுள்ள பாடம்.

அக்தர் போலவோ, பிரட்லீ போலவோ வேகமாகப் பந்துவீசலாம்தான். அனால், அந்தமாதிரியான பந்துவீச்சு எந்தளவுக்கு அணிக்கு பயன்தருகிறது என்பதை ஆராய்ந்து பார்த்துவிட்டு, அதன்பின்னர் வீசவேண்டும்.

எனக்கு இப்போது 20 வயதுதான் ஆகிறது. அவர்களைப் போல பந்துவீசுவதற்கு இன்னும் கொஞ்சம் உடல் வலிமை தேவை.

பெரும்பாலும் நான் மூத்த வீரர்களின் ஆலோசனையோடுதான் எனது பந்துவீச்சை ஆரம்பிப்பேன். ஆரம்பம் அப்படித்தான். ஒன்றிரண்டு ஓவர்கள் வீசிய பிறகு, பந்துவீசும் முறையில் என்ன மாற்றங்கள் செய்யலாம் என்பது குறித்து நான் முடிவு செய்து கொள்கிறேன் என்று இர்பான் பதான் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

## இந்திய - இலங்கை அணிகள் 79 ஆவது முறையாக மோதல்!


இன்று நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆடுவதன் மூலம் இந்தியாவும் இலங்கையும் 79 ஆவது முறையாக மோதவுள்ளன.

இதுவரை நடந்த 78 போட்டிகளில் இந்தியா 41 ஆட்டங்களிலும் இலங்கை 30 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. 7 ஆட்டங்கள் முடிவில்லாமல்போனது.

இந்திய அணி 566 ஆட்டங்களில் விளையாடி 266 போட்டிகளில் வெற்றிபெற்றது. 274 ஆட்டங்களில் தோற்றது. 3 ஆட்டங்கள் சமநிலையில் முடிந்தன. [illegible] போட்டிகளில் முடிவில்லை.

இலங்கை 445 போட்டிகளில் பங்கேற்று 195 ஆட்டங்களில் வெற்றி பெற்றது. 231 ஆட்டங்களில் தோற்றது. 16 போட்டிகளில் முடிவில்லை. 3 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

# குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் அதிர்ச்சித் தோல்வி!




முன்னாள் உலகக் குத்துச் சண்டை சம்பியனான மைக்டைசன் பிரித்தானிய குத்துச் சண்டை வீரரான டனி வில்லியம்ஸ்சிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

ஆரம்பத்தில் அமெரிக்க நாட்டவரான மைக்டைசனின் குத்துக்களை சமாளிக்க டனிவில்லியம்ஸ் கடினப்பட்டாலும் பின்னர் ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டு மைக்டைசனுடன் போட்டியிட்டார்.

மைக்டைசனின் நான்கு குத்துக்களையடுத்து நிலைதடுமாறிய வில்லியம்ஸ், பின் தொடர்ச்சியாக மைக்டைசனைத் தாக்கத் தொடங்கினார்.

டனிஸ் வில்லியம்சின் குத்துக்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாத டைசன் நான்காவது சுற்றிலே தரையில் வீழ்ந்துவிட்டார்.

மீண்டும் எழுந்து போட்டியிடுவதற்கு டைசன் முயற்சித்தபோதும் அவரால் முடியவில்லை.

இதுவே மைக்டைசனின் குத்துச் சண்டை வரலாற்றின் இறுதிப் போட்டி எனக் கருதப்படுகிறது.




## மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட்:

# முதல் இனிங்ஸில் இங்கிலாந்து 566 ஓட்டங்களைக் குவித்தது!



(லண்டன்)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணி 9 விக்கெட் இழப்புக்கு 566 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

நேற்றுமுன்தினம் எக்பாஸ்டன் மைதானத்தில் இரண்டாவது நாள் ஆட்டத்தை இங்கிலாந்து அணி, 5 விக்கெட் இழப்புக்கு 313 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்து ஆரம்பித்தது.

முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 42 ஓட்டங்களுடன் இருந்த பிளின்ரொப்பும், 27 ஆட்டங்களுடன் இருந்த ஜோன்சும் அபாரமாக ஆடி இங்கிலாந்து அணியை பலம் வாய்ந்த நிலைக்குக் கொண்டு சென்றனர்.

பிளின்ரொப்பின் அதிரடியான ஆட்டத்தால் மேற்கிந்தியத்தீவுகள் அணியினர் பெரிதும் சோர்வடைந்தனர். இந்த ஜோடியைப் பிரிக்க இவர்கள் பெரும் பாடுபடவேண்டியதாயிற்று.



இங்கிலாந்து அணி 432 ஓட்டங்களைப் பெற்ற நிலையில்தான் - ஜோன்ஸ்சின் விக்கெட்டை பறிக்க முறிந்தது. 12 பவுண்டரிகளுடன் 74 ஓட்டங்களைப் பெற்ற நிலையில்தான் - ஜோன்ஸ் கொலின் மோரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து பிளின்ரொப்புடன் ஜோடி சேர்ந்த கைல் 24 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது பிராவோவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்து ஹோகாட்டுடன் இணைந்து பிளின்ரொப் தனது அபாரமான ஆட்டத்தைத் தொடர்ந்தார்.

எனினும் 167 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிளின்ரொப் - பிராவோ வீசிய பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.



இவர் 191 பந்துகளை எதிர்கொண்டு 17 பவுண்டரிகள், 7 சிக்ஸர்களுடன் 167 ஓட்டங்களைக் குவித்தார்.

ஹர்மிசன் 31 ஓட்டங்களுடனும் ஹோகாட் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் - இங்கிலாந்து அணி 9 விக்கெட் இழப்புக்கு 566 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது.

முதல் இனிங்ஸில் பிராவோ 4 விக்கெட்டுக்களையும், கொலின்மோர் 2 விக்கெட்டுகளையும், கொலின்ஸ், லோசன், பாங்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட் டையும் வீழ்த்தினர்.



இதையடுத்து மேற்கிந்தியத்தீவுகள் அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

இந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கைல் 7 ஓட்டங்களுடனும் சிமித் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இவர்களின் விக்கெட்டை ஹோகாட் கைப்பற்றினார்.

அடுத்து வந்த சர்வான் 16 பவுண்டரிகளுடன் 83 ஓட்டங்களையும், லாரா 11 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 74 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

ஆட்டமுடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 விக்கெட் இழப்புக்கு 184 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.




### மென்பந்தாட்ட இறுதிப்போட்டி!

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று பி.ப 3 மணிக்கு திக்கமுனை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

20 ஓவர் கொண்ட இறுதிப் போட்டியில் வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஸ்பேஸ் 'ஏ' அணியும், 05 ஓவர் கொண்ட இறுதிப் போட்டியில் ஸ்பேஸ அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக புரூஸ் அணியும் மோதவுள்ளன.

### பாலர் விளையாட்டு!

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

### மாட்டுவண்டி சவாரிப் போட்டி!

தமிழீழ விளையாட்டுத்துறையினரின் அனுசரணையுடன் வட்டக்கச்சி கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடத்தப்படவுள்ளது.

### தாச்சிச் சுற்றுப்போட்டி!

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு கைதடி மதிஒலி அணியை எதிர்த்து ஆலடி இந்து விளையாட்டுக்கழகம் மோதும் போட்டியும்,

பிற்பகல் 5.00 மணிக்கு கைதடி வெண்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

### உதைபந்தாட்டப் போட்டி!

(பருத்தித்துறை)

வதிரி - தேவரையாளி யங் லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு பொமர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழகமும்,

பிற்பகல் 4.00 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (13)

## சின்னஞ் சிறு செய்திகள்

### கசிப்பு விற்ற பெண் கையொப்பமிட உத்தரவு

(சாவகச்சேரி)

சட்டவிரோதமாக கசிப்பு விற்ற பெண் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் - சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சம்மந்தப்பட்ட பெண்ணினது குடும்ப நிலைமையை கருத்தில் கொண்டு, அவரை அலுவலகம் நடைபெறும் நாட்களில் இரண்டு மாதங்களுக்கு நீதிமன்றில் கையொப்பமிடுமாறு சாவகச்சேரி நீதிவான் கட்டளையிட்டார்

(29)

### இந்து சமயவார ஆலோசனைக் கூட்டம்

இலங்கை சிந்மய மிஷனால், ஒகஸ்ட் 23 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இந்து சமய விழிப்புணர்வுவாரம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் - இல.141, பலாலி வீதி, கந்தர் மடத்திலுள்ள பேரவையின் செயலகத்தில் நடைபெவுள்ளது.

# அரசாங்கம் சமாதானத்தை ஏற்படுத்தாமல் நாட்டை அபாயநிலைக்கு கொண்டு செல்கிறது

## யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவிப்பு

இன்றைய அரசு சமாதானததை ஏற்படுத்தாமல், அபாயகரமான நிலைக்கு நாட்டை இட்டுச் செல்கிறது. தீர்வில்லாத ஒரு பேச்சுவார்த்தையை நடத்துவதற்குக் காலங்களை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது என, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ். ப.நோ.கூ.சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுயில் -

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைப் பேணிக் கொண்டு, மக்களின் தனித்துவத்தைப் பேணும்வகையிலேயே எமது இடைக்கால வரைவு உள்ளது. அந்த அடிப்படையில் கூட, பேச்சுவார்த்தையை நடத்த தற்போதைய அரசு முன்வராமல் இழுத்தடித்துக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

நாங்கள் எல்லோரும் வேண்டி நிற்பது விடுதலை. விடுதலை என பது ஒரு புதிய சமுதாயத்தை சுதந்திரமான நிலையில் தக்கவைப்பது என்பதுதான்.

சுதந்திரமான விடுதலையைப் பெறுவதற்கு சில தகைமைகள் வேண்டும்.

ஒன்று - அவர்கள் போராடும் பகுதியில் 70 வீதமான நிலப்பரப்பை தக்கவைத்துக் கொள்ளுதல். இரண்டு - அந்தப் பகுதியைப் பாதுகாத்துக் கொள்ளக்டிய சுயபலம். மூன்று - ஒரு நாட்டுக்கு உரிய கட்டமைப்புக்களை செயறபடுத்தும் திறன். நான்கு- போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

இந்த நான்கு திடத்தினையும் கொண்டுள்ள எமது அமைப்பு- விட்டுக்கொடுத்தல், பொறுமை காத்தல் போன்ற கைங்கரியங்களைக் கையாண்டு, சர்வதேச அங்கீகாரத்தைப்பெற முயன்றுகொண்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ் பேசுகையில் -



நாட்டு நிலைமைகள் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுச் செல்கின்ற கட்டத்தில், சிகை அலங்கரிப்பாளர் சங்கம் போன்ற அமைப்புக்களின் கட்டமைப்புக்கள் சீராக வடிவமைக்கப்பட்டு செயறபடவேண்டும்.

ஏ-9 பாதை திறந்தாலும், தமிழ் மக்களின் நிலைமை நிம்மதியாக வாழ முடியாமல் தான் இருந்து வருகிறது.

கொலை, கொள்ளை, கற்பழிப்புப் போன்ற சமூகச் சீர்கேடுகள்- அந்நியர்களால் இங்கே விதைக்கப்பட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக 15 வயதிலிருந்து 19 வயதுக்குட்பட்ட எமது இளைய சமுதாயம் மேற்சொல்லப்பட்ட சமூகச் சீரழிவுகளுக்குள் அகப்பட்டு, எதிர்கால வாழ்க்கையை இழந்து வருவதைக் காணலாம் எனத் தெரிவித்தார். (206)

## சின்னஞ் சிறு செய்திகள்

### வீதி விளக்குகள் பொருத்த ஏற்பாடு

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட 28 கிராம சேவையாளர் பிரிவுகளில், முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட 127 இடங்களுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளதாக, பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் தெரிவித்தார். (100)

### இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளையின் 65 ஆவது ஆண்டு விழா

சாவகச்சேரி இலங்கை வங்கி கிளையின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழா - சாவகச்சேரியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் புதிய சேமிப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(29)

### ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் - பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெறும் வாராந்த ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில், இன்று காலை 10 மணியளவில் "பெரிய புராணத்தில் பக்தி" என்னும் பொருள் பற்றி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆசிரியை கல்யாணி சொற்பொழிவாற்றவுள்ளார்.

(17)

# வெடிபொருள் வைத்திருந்த நபருக்கு யாழ்ப்பாண நீதிமன்றம் பிடியாணை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக வெடிமருந்துப் பொருட்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவரை மீண்டும் கைது செய்யுமாறு யாழ். மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

திருநெல்வேலியைச் சேர்ந்த நித்தியானந்தன் மயூரதன் என்பவர் -2000 ஆம் ஆண்டு யூலை மாதம் சட்டவிரோதமாக வெடிமருந்துப் பொருட்களை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சட்டமா அதிபரால் இவருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பின்னர் குறிப்பிட்ட சந்தேக நபர், யாழ். மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் குறிப்பிட்ட வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, எதிராளி நீதிமன்றில் ஆஜராகவில்லை.

குறிப்பிட்ட எதிராளி சார்பில் முன்னர் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு- எதிராளி தனக்கு எதுவித அறிவித்தலும் வழங்காமையால் இந்த வழக்கில் இருந்து விலகிக்கொள்வதாகத் தெரிவித்தார்.

அதனை அடுத்து குறிப்பிட்ட எதிராளியைக் கைதுசெய்யுமாறு, உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதிவான் - எதிராளிக்குப் பிணையாக நின்ற இருவரையும் அடுத்த மாதம் 22 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

# வடமராட்சி பகுதிகளில் டெங்கு ஒழிப்பு பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் பரவிவரும் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் முகமாக குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் இணைந்து புலோலி தெற்கு, துறையா மூலை, முருகையன் கோயிலடி, மந்திகை, கருகம்பன், மடத்தடி, இலவடி ஆகிய பகுதிகளில் விழிப்புணர்வு பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், அந்தப் பகுதிகளில் காணப்படும் மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களைத் துப்புரவு செய்வதுடன், பாவனையற்று வீசப்பட்ட வெற்றுப் பேணிகள், போத்தல்கள் என்பனவற்றுள் நிறைந்திருக்கும் அழுக்கு நீரில் உற்பத்தியாகும் குடம்பிகளை அழிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை புஸ்பா வெற்றிவேலு தலைமை வகித்து முன்னெடுத்து வருகிறார். (13)



குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவில் இடம்பெற்ற வேப்பிலை நடனக் காட்சியைப் படத்தில் காணலாம். (13)

# தமிழர்களின் கலாசாரத்தை நினைவுபடுத்த முத்தமிழ் விழாக்கள் கொண்டாடுவது அவசியம்

## கலாநிதி க.குணராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுடன் - அறிவியல் சார்நத இன்னுமொரு தமிழையும் மாணவர்கள் கற்கவேண்டும் அது தான் கணினித் தமிழாகும். இந்த கணினிக்குள் இயல், இசை, நாடகம் அனைத்தையும் அடக்கிவிடலாம்.

கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து அவற்றை மீண்டும் நினைவுபடுத்த இதுபோன்ற முத்தமிழ் விழாக்கள் அவசியமாகும் என கலாநிதி க.குணராஜா தெரிவித்தார்.

கந்தரோடை - ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 110 ஆவது அகவையை ஆரம்பிக்கும் முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி முதல்வர் க.சிவாஜி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், இவர் தொடர்ந்து பேசுகையில் -

இனத்தின் அடையாளமாக விளங்குவது - உணவு, உடை விருந்தோம்பல், பெயர் என்பனவாகும். முன்னர் உணவு முறையை அடிப்படையாக வைத்து இனததை அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

ஆனால், இன்று தமிழ் மக்கள் உணவுப் பழக்கத்திலும் மேலைத்தேய முறையைப் பின்பற்றுவதால், எமது பாரம்பரிய தானிய உணவு வகைகளை கைவிட்டு விட்டனர்.

அதேபோல், பிள்ளைகளுக்கு பெயர் சூட்டுவதிலும் தமிழ் பாரம்பரியத்தை ஒதுக்கி விட்டதனால், இனத்தின் அடையாளம் அழிவதற்கு வழிவகுத்துவிட்டனர்.

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும், யாழ்ப்பாணத் தமிழருக்கும் பெரும் வேறுபாடு முன்னைய காலங்களில் காணபபட்டது.

தமிழில் கூடிய பாண்டித்தியம் பெற்றிருந்த யாழ்ப்பாணத்தவர் - தமிழை உச்சரிப்பதிலும், எழுதுவதிலும் சிறந்த அறிவாளிகளாகக் காணப்பட்டனர். ஆனால், இன்று வெளிநாட்டு கலாசாரம் எம்மீது பரவ ஆரம்பித்து விட்டது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் உரையாற்றுகையில் - மாணவர்கள் தான் முக்கியமாக கலாசாரத்தை பேணிப் பாதுகாக்க வேண்டியவர்கள். ஆனால், அவர்களே இன்று பல சீர்கேடான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது மிகுந்த வேதனையை அளிக்கின்றது.

தாங்கள் கறகும் பாடசாலையின் பெயரையும், இந்த மண்ணின் பெருமையையும் அழியவிடாது பாதுகாப்ப வேண்டியவர்கள் மாணவர்களே. அவர்கள் இன்று முத்தமிழ் விழா எடுக்கின்றார்கள் இது பாராட்டப்பட வேண்டியது எனத் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் சிவாஜி உரையாற்றுகையில் -

தமிழின் பெருமையை அந்தக் காலத்தில் வாழ்ந்த நக்கீரன், சத்தலைச் சாத்தனர் என்போர் உலகறியச் செய்ததாலேயே, நாம் இன்றும் தமிழை பிழை இன்றி உச்சரிக்க முடிகிறது.

சத்தலைச் சாத்தனர் என்னும் புலவர் - வேறு யாராவது தமிழ் பேசும் போதுகூட, அதில் பிழை ஏற்பட்டால் உடனே தனது தலையில் குட்டுவார் அந்தளவிக்கு அக்காலத்தில் வாழ்ந்தோர் தாய்மொழிக்கு மிகுந்த மதிப்பு கொடுத்தார்கள்.

இந்தக் காலத்தில் தமிழுடன் வேற்றுமொழி கலந்து பேசப்படுகின்றது இதுவே நாகரீகம் என நினைக்கின்றார்கள். இதனால், எமது தாய்மொழி சிதைக்கபடுகிறது. இதை ஏற்க முடியாது எனத் தெரிவித்தார்.

தொடந்து செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனின் உரையும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் தமிழ் மொழித்திற போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவமும் இடம்பெற்றன. (101)

# வெடிமருந்துகளை வைத்திருந்தவரை பிணையில் செல்ல அனுமதிக்கலாமா?

## அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வெடிமருந்துப் பொருட்களை வைத்திருந்த நபர்களுக்கு பிணை வழங்க முடியுமா? என்பது பற்றி ஆராய்ந்து, நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். மேலதிக நீதிமன்ற நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார்.

குருநகர் பகுதியில் அண்மையில் கடலுக்குச் சென்று திரும்பிய வேளை, வெடிமருந்து எடுத்து வந்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில், நான்கு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

வெடிமருந்து தடைச்சட்டத்தின் கீழ் யாழ். நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் யாழ். மேலதிக நீதிமன்ற நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனால் ஆஜர் செய்யப்பட்ட வேளை, தமகுப் பிணை வழங்குமாறு சட்டத் தரணி ஊடாக கோரிக்கை விடுத்தனர்.

வெடிமருந்து தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் நான்கு பேருககும் பிணை வழங்க முடியுமா என ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேலதிக நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# விளையாட்டு அரங்கம்



## வங்கத்து சிங்கம் பாய்ந்தே தீரும்



கங்கூலி, இன்ஸமாம் “ஞாபகத்தில் இருக்கட்டும் தம்பி”

**Catches win matches** என்பார்கள். அதாவது, பிடிகள் தான் வெற்றியைத் தீர்மானிப்பது. அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை, நடந்து முடிந்த இந்திய - பாகிஸ்தான் ஆட்டம் நிரூபித்துள்ளது. சொகைப் மலிக் 37 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது, ஷேவாக் தவறவிட்ட பிடி, அவரை 143 ஓட்டங்கள் எடுக்கவைத்துவிட்டது.

பாகிஸ்தானில் வென்ற இந்தியஅணி இந்தப் போட்டியிலும் வெற்றிபெற்று, போனஸ் பரிசு கொடுக்கும் என்று எதிர்பார்த்த ரசிகர் களுக்கு இந்தியா போனஸ்புள்ளியைப் பெறு வதற்கே பட்டபாட்டை நினைத்து அதிர்ச்சி அடைந்திருப்பார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இந்தியஅணி, பாகிஸ்தானுக்குச் சென்ற போது பாகிஸ்தானுடனான கடைசி ஒருநாள் போட்டியில் சதமடித்துத் தொடரை வெல்லக் காரணமாக இருந்த லக்ஷ்மன், முழு உடற் தகுதியுடன் இல்லாததன் காரணத்தினாலேயே, இந்த ஆட்டத்தில் வழமைக்கு மாறாக, 5 பந்து வீச்சாளர்களுடன் இந்தியஅணி களமிறங்கியது.

இலங்கையுடனான ஆட்டத்தில் பட்டேல் பிரகாசிக்கத் தவறியமையால், லக்ஷ்மனுக்குப் பதிலாக அவரைக் களமிறக்க கங்கூலி விரும் பவில்லை. அவருக்குப் பதிலாக பதானியோ அல்லது ரோகன் கவாஸ்கரோ 14 பேரில் இடம் பெற்றிருந்தால் கட்டாயம் வாய்ப்பளிக்கப்பட்டு 7 துடுப்பாட்ட வீரர்களுடன் ஆடியிருப்பர்.

2002 இலங்கையில் நடைபெற்ற ICC தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடுவதற்காக 15 பேர் கொண்ட குழாமில் ஸ்ரீநாத் இல்லாத போதும், கங்கூலி இந்திய கிரிக்கெட் சபையுடன் தொடர்பு கொண்டு உடனடியாக அவரை அழைத்துப் போட்டியில் கலந்து கொள்ள வைத்ததைப் போன்று இந்தப் போட்டியிலும் கங்கூலி செயற்பட்டிருக்கலாம்.

டெண்டுல்கரின் ஆட்டம் பற்றி பல்வேறு விமர்சனங் கள் கூறப்பட்டாலும், கங்கூலியோ யுவராஜோ களத்தில் இருந்து அதிரடியைக் கையாளும் வரை விக்கெட்டுக் கள் விழுவதைத் தடுக்கும் வகையில் அவர் நிதான மான தற்காப்பு ஆட்டத்தைக் கையாண்டார்.

ஆனால், 5 விக்கெட்டுக்கள் விழுந்ததுமே அணி நிர்வாகத்தின் கட்டளைப்படி போனஸ் புள்ளியைப் பெறுவதற்கு ஏற்ப ஆடும்படி கூறியதால் அவரும் தொடர்ந்து தற்காப்புப் பாணியையே கடைப்பிடித்தார்.

ஆகவே, நெருக்கடியான சந் தர்ப்பங்களில் சிறிது அழுத் தங்களோடு விளை யாடி வெற்றி பெறுவதையே விரும்பும் டெண்டுல்கரின் இயல்பான ஆட்டத் துக்கு அணி நிர்வாகம் கால்கட்டு - மன்னிக்கவும், கைக்கட்டு போட்டு விட்டார்கள் என்று சொன்னால் அது மிகையில்லை.

இந்தப் போட்டியில் இந்திய வீரர்கள் இலங்கை மண் தங்கள் உடலில் பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தது போல், களத்தடுப்பை மிகவும் மோசமாக மேற்கொண்டிருந்தமையும் மோசமான பந்து வீச்சும், ஒரு நாள் போட்டிகளில் 200 ஓட்டங்கள் பெறுவேன் என்று கூறிய ஷேவாக் தான் விளையாடிய நான்கு போட்டியிலும் மொத்தம் 54 ஓட்டங்களைப் பெற்று, இந்தத் தொடரில் துடுப்பாட்டத்தில் ஜொலிக்கா ததும் இந்தியா தோல்வி அடையக்காரணம் எனலாம்.

மேலும், இம்ரான் நஸீருக்கு **LBW** தீர்ப்பு வழங்கியதை ஏற்றுக் கொண்ட மனதால், ராவிட்டுக்கு வழங்கிய **LBW** தீர்ப்பை திருப்திகரமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

எது எப்படியோ, சொந்த மண்ணில் தோல் வியைச் சந்தித்த பாகிஸ்தான் வஞ்சம் தீர்த்துக் கொண்டது. எவ்வளவு உண்மையோ, அவ்வாறே இந்த மாதம் ஹொலன்டில் நடைபெறவுள்ள மூன்று நாடுகள் பங்கு பற்றும் போட்டியில் கட்டாயம் பாகிஸ்தானை பழிதீர்ப்போம் என்று கங்கூலி பேட்டி அளிக்கப் போவதும் உண்மை. வங்கச் சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறையாது.

*-விமலன்*



**சொஹைப் மாலிக்**
“நெதர்லாந்திலும் நொருக்குவேன்”

## மனிதரில் இத்தனை நிறங்களா


ஏதென்ஸ் ஒலிம்பிக் 2004 ஆம் ஆண்டில் 100 மீற்றர், 200 மீற்றர் இரண்டு நிகழ்விலும் கலந்துகொள்ளும் தகுதியை இழந்துநிற்கிறார் மரியன்ஜோன்ஸ். நீளம் பாய்தல் மற்றும் இரண்டு அஞ்சலோட்டங்களில் அவர் கலந்துகொள்வார். 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் மரியன் வென்ற பதக்கங்கள் ஐந்து. அப்போது இவரது கணவர் ஹண்டர் பழுதூக்குதலில் தங்கம் வென்று ஊக்கமருந்துப் பாவனைக் குற்றச்சாட்டில் தங்கம் பறிக்கப்பட்டார். இதன் பின் வந்த காலத்தில் மரியனும் ஹண்டரும் விவாகரத்துச் செய்துகொண்டமை அவர்களது குடும்ப விடயம்.

பின்னர், தற்போது ரிம்மொண்ட் கொமரியுடன் இணைந்து வாழ்ந்து, ஒரு மகனுக்கும் தாய் மரியன். இடைக்காலத்தில் ஊக்கமருந்துப் பாவனை தொடர்பில் மரியன்ஜோன்ஸின் பெயரும் சம்பந்தப்பட்டுப் பேசப்பட்டது. அது தொடர்பாக விசாரணைகளும் நடைபெறுகின்றன.

இந்த நிலையில்தான் முன்னாள் கணவர் ஹண்டர் ஏற்கனவே மரியன்ஜோன்ஸ் ஊக்கமருந்துகள் பாவித்தவர் என்றொரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். ஆனால், இவரது இந்தஅறிக்கை மரியன்ஜோன்ஸின் மீது கொண்ட காழ்ப்புணர்விலும் பொறாமையிலும் வேண்டுமென்றே புனையப்பட்டதொன்று என்ற கருத்து மேலோங்கியிருக்கிறது. அதோடு, மரியன்ஜோன்ஸின் வழக்கறிஞர் கருத்துக்கூறும்போது ஹண்டர் கொடுத்த வாக்குமூலம் முன்னுக்குப் பின் முரணானதாக அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகிறார். எனவே, மூக்குப்போனாலும் சகுனம் பிழைத்தால் போதும் என்ற ஹண்டரின் சிந்தனை தோல்வியடையும் என்றே தோன்றுகின்றது.

மறுவளமாக மிக நம்பிக்கையுடன் இருந்த மரியன்ஜோன்ஸின் 100 மீற்றர், 200 மீற்றர் ஒலிம்பிக் கனவுகள் சிதைந்துபோனமைக்குக் காரணம் இவர் மீது சுமத்தப்பட்ட ஊக்கமருந்துப் பாவனை சந்தேகங்களாகவும் இருக்கும். அந்த மன அழுத்தங்கள் அவரது புறவய நடவடிக்கைகளைப் பாதித்திருக்கலாம். மரியன் ஜோன்ஸ் பற்றிய சர்ச்சைகள் எந்தளவில் போய்முடியும் என்பது அநேகமாக 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் முடிவடையும் போது தான் தெரியும்போல இருக்கிறது.

*-பிரியா*



மரியன் ஜோன்ஸ் “அவளா செய்தாள் இருக்காது”



# உன் பார்வை ஒன்றே போதுமே

FIFA இன் தலைவர் ஸெப் பிளெட்டர் புதியதொரு கண்ணோட்டத்துடன் சிந்திக்கின்றார். உதைபந்தாட்ட உலகில் ஐரோப்பாவின் பலம் சர்வதேசமும் அறிந்ததே. அதேவேளை ஆசியா கண்டம் பொறுத்து, ஒருசில நாடுகள் உதாரணமாக சீனா, ஜப்பான், கொரியா, ஒருசில மத்திய கிழக்கு நாடுகள் தவிர அநேகமான நாடுகள் குறைந்த தரத்திலேயே உள்ளார்கள். எனவே, ஆசிய கழக உதைபந்தாட்ட நிலையில் ஐரோப்பிய வீரர்கள் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்படவேண்டு மென்று எடுத்துக்காட்டியுள்ளார்.




வெய்ன் ரூனி "தம்பி இந்தப்பக்கம் வந்துபோ"

ஐரோப்பிய கழகங்களில் நிறையவே வீரர்கள் இருக்கிறார்கள். இதில் தொடர்ந்தும் விளையாடுபவர்கள் தவிர மேலதிகமாகப் பலர் வருடத்தில் ஒரு சில ஆட்டங்கள் மட்டும் விளையாடிவிட்டு வெறுமனே உட்கார்ந்திருக்கிறார்கள் இவர்கள் ஆசிய உதைபந்தாட்டத்துறைக்கு அழைக்கப்படலாம் என்கிறார் அவர்.

இங்கு முக்கியமான பிரச்சினை நிதிவளம் சார்பானது என்பதையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஆசிய நாடுகள் ஐரோப்பிய நாடுகள் போன்ற பொருளாதார வளம் கொண்டவையல்ல. இந்த நிலையில் ஐரோப்பிய இரண்டாம், மூன்றாம்நிலை வீரர் ஒருவரை கவர்ந்திழுக்க ஆசியாவால் முடியுமா என்பது சந்தேகம் தான்.

இருந்தாலும், பிளெட்டர் நம்பிக்கையாக இருக்கிறார். ஆசியாவின் உதைபந்தாட்டம் வளர்ச்சிப் போக்கில் காணப்படுகிறது என்கிறார். ஒப்பீட்டளவில் ஒரு சில ஆசிய நாடுகள் தான் உலகத்தரம் வாய்ந்தவை. ஏனைய நாடுகள்...? உதாரணமாக எமது பிராந்தியமான தென்னாசிய நாடுகள்?

பிளெட்டரின் சிந்தனை நல்லது தான் என்றாலும், அதற்கு முன்னதாக சர்வதேசத்தரம் வாய்ந்த ஆசிய நாடுகள், வளர்ந்துவருகின்ற ஆசிய நாடுகளுடன் அந்த நாட்டுக்கழகங்களுடன் பரஸ்பர விளையாட்டு உறவுகளை மேம்படுத்த முயலலாம். உதாரணமாக - ஈரான், ஈராக், சவுதி, ஜப்பான், தென் கொரியா போன்றவை நன்கு வளர்ச்சியடைந்தவை. எனவே, ஒரு ஒழுங்கமைப்பு ரீதியாக இப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுதலும் நிறைந்த பிரயோசனத்தைத் தரும். FIFA இன் தலைவர் நல்லதொரு சிந்தனையை ஏற்படுத்தியிருக்கிறார். ஆசிய நாடுகளின் உதைபந்தாட்ட சபைகள், கழகங்கள் இதனை ஒரு ஆரம்பமாகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இது அவசியமும் கூட. ஏனெனில் எத்தனையோ விளையாட்டுகள் பிரபலமாக இருந்தாலும், உலகளாவிய ரீதியில் உதைபந்தாட்டத்துக்கு உள்ள ரசிகர் படைக்கு அருகில் கூட வேறெந்த விளையாட்டின் ரசிகர்களும் நெருங்க முடியாது.

-நிர்மலன்




சிடானே "கிழக்கே பாருங்கள்"

# கருமை நிறம் தோன்றுதடா நந்தலாலா

நம்பிக்கை தந்த மொறிஸ்கிறீன் திரும்ப ஏமாற்றி விட்டார். புதிய திசையில் இருந்து புயல் அடித்து ஓய்ந்திருக்கிறது. பாரிஸ் கோல்டன் லீக் தடகளப் போட்டிகளில் இங்கு மொறிஸ் கிறீனைத் தோற்கடித்தவர், நைஜீரியாவில் பிறந்து, போர்த்துக்கல் நாட்டில் வாழும் பிரான்சிஸ் ஒபிக்வெலு. இவர் 10.06 செக்கன்களில் 100 மீற்றரை ஓடிமுடிக்க கிறீன் அதற்காக எடுத்துக் கொண்ட நேரம் 10.14 செக்கன்கள். மூன்றாவதாக வந்தவர் கானா நாட்டின் அலீஸ் சக்காரி. மூன்றாவதாக வந்தாலும், இவர் எடுத்துக் கொண்ட நேரமும் கிறீனுக்கு மகிழ்ச்சியாக இல்லை.

இன்னும், இரு அமெரிக்கரும் பிரான்சிஸ் ஒபிக்வெலுவின் செயலால் துக்கப்பட்டுப் போயிருக்கிறார்கள். அமெரிக்கர்களான ஜோசுவா ஜே ஜோன்சன் மற்றும் பிரான்கிளின்ரேக்ஸ் இருவரையும் பின் தள்ளி 20.12 செக்கன்களில் 200 மீற்றர் வெற்றியைக் கையகப்படுத்திக் கொண்டார்.

இதேவேளை, வழமையான பாணியில் நீண்ட தூர ஓட்டங்கள் இரண்டை கென்ய நாட்டவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். அதாவது, ஆடவர் 1500 மீற்றர் நெடுந்தூர ஓட்டம் மற்றும் 3000 மீற்றர் மகளிர் நெடுந்தூர ஓட்டங்களில் முதல் ஆறு இடங்களையும் பெற்றுக் கொண்டவர்கள் கென்ய நாட்டவர். ஆண்கள் 1500 மீற்றர் நெடுந்தூர ஓட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பேர்னாட்லெகட்(29.21 செக்கன்) திமொத்தி கிப்ரானு, கொர்னெலியஸ் சிர்சிக் ஆகியோரில் ஒருவர் ஏதென்ஸ் தங்கத்தைச் சூடிக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

-நிம்மி




பேர்னாட் லகட் "உறுதியே முடிச்சுட்டீங்களா"

# தலைக்கனம் கூடாது தலைமைக்கு

ஒரு அணியின் தலைமைப்பொறுப்பு என்பது ஒன்றும் சுலபமான விடயம் அல்ல. அதிலும் கிரிக்கெட் அணி ஒன்றின் தலைமைப் பொறுப்பு என்பது மிகவும் கடினமானதொரு அந்தஸ்தே.

ஒரு அணித்தலைவனுக்குப் பொறுப்புணர்வு, நிதானம், வழிநடத்தும் பாங்கு, எதையும் அனுசரித்துப் போகும்தன்மை என்பன இன்றியமையாதவையாகின்றன.

ஆனால், அண்மைய காலங்களாக ஒருசில அணித்தலைவர்கள் மைதானத்தில் அதீத உணர்ச்சி வசப்படுவதும், தோல்வியடைந்தால் ஒருசிலரையோ அல்லது குறிப்பிட்ட ஒரு நிலையையோ அதாவது களத்தடுப்பு, துடுப்பாட்டம், பந்துவீச்சு என்பனவற்றில் ஒரு நிலை சரியில்லையெனக் குற்றஞ்சாட்டுவதும் வழமையாகிவிட்டது.



மாவன் அத்தப்பத்து "அன்புச் சங்கிலியா வைத்திருக்கிறாய்"

அதிலும் இந்திய அணியைப் பொறுத்தவரையில் இந்த நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகிறது.

அணித்தலைவர் ஒவ்வொரு தோல்விகளுக்கும் பின்னர் யாராவது ஒருவரைச் சாடுவார். இலங்கை அணியுடனான தோல்வியின் பின்னர் டெண்டுல்கரைச் சாடியுள்ள கங்கூலி, பாகிஸ்தான் அணியுடனான தோல்விக்குப் பின்னர் பந்துவீச்சாளர்களைச் சாடியுள்ளார்.

வெற்றிபெறும் சந்தர்ப்பங்களில் அணிவீரர்கள் அனைவரும் இணைந்து திறம்படச் செயற்பட்டார்கள் எனத் தெரிவிப்பதும், தோல்வியின் பின்னர் ஒருசிலரைச் சாடுவதும் ஆரோக்கியமானதல்ல.

இந்த நிலைமை பாகிஸ்தான் அணியிலும் காணப்படுகிறது. அண்மைய காலமாக அக்தரைக் குற்றஞ்சாட்டுவதும், முன்னாள் அணித்தலைவர் அக்ரம், மைதானத்தில் வீரர்கள் தவறிழைக்கும்போது கடுமையாக நடந்துகொள்வதும் தக்கசான்றுகள் ஆகும். அக்ரமின் கடுமையான நடவடிக்கைகளால் பதட்டமடைந்து மேலும் மேலும் தவறிழைத்த வீரர்களும் உள்ளனர்.

ஆனால், இலங்கை அணியின் தலைவர் மாவன் அத்தபத்து இந்த விடயத்தில் சற்று உயர்ந்தவராகவே காணப்படுகின்றார்.

சனத் பற்றி ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த மாவன் அத்தபத்து, சனத் தற்போது திடமற்ற நிலையில் இருப்பதாகவும், ஆனாலும் அவர் ஒரு அதிசிறந்த வீரர் எனவும் தெரிவித்ததோடு, எதிர்வரும் போட்டியில் சனத் சாதிப்பார் எனவும் நம்பிக்கை வெளியிட்டார். சனத்தும் சாதித்தார். இதுவே ஒரு தலைமைப் பொறுப்பின் பொறுப்புணர்வு.

எனவே, கங்கூலி போன்ற தலைவர்கள் பிளமிங் மற்றும் அத்தபத்து போன்றவர்களிடம் கற்க வேண்டிய விடயங்கள் நிறைய உண்டு.

-லெஸ்லி

# யானை கறுத்தாலும் ஆயிரம் பொன்

சில யதார்த்தங்களை ஏற்றுக்கொள்வது கஷ்டமாக இருக்கும். ஆனால், தவிர்க்க முடியாது. இது சனத்ஜெயசூர்ய பற்றிய குறிப்பு. தற்போது அவருக்கு வயது 35. முன்னெல்லாம் சனத்தின் மைதானப் பிரசன்னம் என்பது அற்புதம்தான். அதிரடி ரன் மழை என்று... விபரிக்கவே முடியாது.

ஆனால், குறிப்பாக அவுஸ்ரேலிய சுற்றுப்பயணம் சனத்தின் வீழ்ச்சிக் காலத்தைக் குறித்துநிற்கிறது. மக்ரா, ஜிலெஸ்பி, கஸ்பரோவிச் போன்ற பந்துவீச்சாளருக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இவரால் எடுக்க முடிந்தது நான்கு இனிங்ஸுகளிலும் 8-13-16-22 ஓட்டங்களே. அவுஸ்ரேலியப் பந்துவீச்சாளர்கள், குறிப்பாக மக்ரா, உளவியல் ரீதியாக டெஸ்ட் தொடருக்கு முன்பே 'இவரே இலக்கு' என்று கூறிக் கூறியே இவரைத் தளர்வடையச் செய்துவிட்டார் என்கிறார்கள் விமர்சகர்கள். சனத் மறுவளமாக அதற்குப் பணிந்து போய் விட்டார் என்பதே உண்மை.

இன்னொருபுறம் தளர்ந்து கொண்டு போகும் சனத்துக்கு நிரந்தர இடம். ஆனால், றஸல் ஆர்னல்டின் காலம் முடிவுக்கு வந்துவிட்டது போலத் தெரிவாளர்களால் காட்டப்படுகிறார். சனத் போலவே டார்வின் டெஸ்டில் ஆர்னல்ட் சோபிக்கவில்லை. இருந்தாலும், இந்தியன் ஒயில் ஆசியக் கிண்ணப் போட்டிகளுக்கு சனத் உள்ளே ஆர்னல்ட் வெளியே.




சனத் ஜயசூரிய "உனக்கொரு புதிய பார்வை"

இன்னொருபுறம் சமன் ஜயந்த, அவிஸ்க குணவர்த்தன இருவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சோபிக்கத் தொடங்கிவிட்டார்கள். எனவே, தெரிவாளர்கள் மாற்றியோசிக்கத் தொடங்கவேண்டிய காலம் வந்துவிட்டது. அதுமட்டுமல்ல, இளைய ரத்தங்கள் அணியில் புகுத்தப்படவேண்டிய நிலையில் விலகவேண்டியவர்கள் விலகத்தான் வேண்டும். சில வாரங்களுக்கு தெரிவுக் குழுவினர் சில வீரர்களுக்குச் சாதகமாகவும் சில வீரர்களுக்குப் பாதகமாகவும் நடந்துகொள்வதாகக் குற்றச்சாட்டு ஒன்று எழுந்திருந்தது. இன்னொருபுறம் SENIOR வீரர்கள் அணிக்குள் ஆதிக்கம் செலுத்துவதாகவும் ஒரு முணு முணுப்பு எழுந்தது. எனவே, இவற்றுள் சில சனத்துக்கும் பொருந்தி விடுமோ என்று ஒரு அச்சம் ஏற்படுகிறது. ஏனெனில், அவர் மிகக் கண்ணியமானவர். அதிசிறந்த வீரரும் கூட. இதனாற்தான் அவரது காலம் கடந்து விட்டதென்று உணர்ந்து கொண்டால், தானாகவே விலகிக் கொள்வது அவரது கௌரவத்துக்குப் பெருமை என்பதுடன், பின்னால் நிற்கின்ற இளைஞர்களுக்கும் ஒளி தெரியும்.

-ஜோசப் கிருஸ்ணா




# தொழில்நுட்பப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் தமிழர் தாயகப் பகுதியில் நியமிக்கப்படுவதில்லை

## தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

அரசபடைகள் எமது மண்ணை ஆக்கிரமிதது்க்கொண்டு, எமது பாடசாலைகளில் முகாம் அமைத்து, அவற்றை உடைத்துக்கொண்டு தமிழ் மாணவர்கள் தமக்கு எதிராக அரசியலல ஈடுபடவேண்டாம் என்று மிரட்டி வருகின்றது என்று, தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற தமிழீழ வரலாற்றுத் தேர்வில், வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழஙகும் நிகழ்வில் கலந்து கொணடு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கடந்ததேர்வில் கடல்வளப்பாடங்கள் - தொழில்நுட்பப்பாடங்கள் என்ற வகையில் அறிமுகப்படுத்தப்பட்டன.



தொழில் நுட்பப்பாடம் என்ற வகையில் - விவசாயம், வர்த்தகம் ஆகிய பாடங்களையே தமிழ் மாணவர்கள் கற்றுவருகின்றனர்.

ஏனைய தொழில்நுட்பங்களைக் கற்பதற்கான பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும், அவற்றுக்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை.

அவ்வாறான பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் தமிழர் தாயகப்பகுதிகளுக்கு நியமிக்கப்படுவதில்லை.

இதனால், ஏனைய தொழில்நுட்பப்பாடங்களுக்கு மாணவர் தோற்றுகின்ற வீதம் மிக மிகக் குறைவு.

மாறாக 96 வீதமான சிங்கள மாணவர்கள் இவ்வாறான தொழில் நுட்பப்பாடங்களைக் கற்றுவருகின்றனர். அவர்களுக்கு வசதி வாய்ப்புக்கள் செய்துகொடுக்கப்படுகின்றன.

எமது ஏராளமான பாடசாலைகள் இராணுவத்தினரால் அழித்தொழிக்கப்பட்டன. சில பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இயங்காதுள்ளன.

சில பாடசாலைகளில் படையினர் முகாம் அமைத்து இருப்பதனால், வேறு இடங்களில் பாடசாலைகள் இயங்கிவருகின்றன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்னதாகத் தமிழீழக் கல்விப் பேரவை முதல்வர் பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில், பொதுச்சுடரைத் தமிழீழக் காவல்துறைத் துணைப் பொறுப்பாளர் மாதவன், புலிகளின் குரல நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றினார். தமிழீழ கல்விக்கழகக் கொடியை கல்வி மேம்பாட்டுப் பேரவை முதல்வர் பிரான்சிஸ் அடிகளார் ஏற்றினார்.

உரைகளை - கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அரியரட்ணம், முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் தேவேந்திரன், ஓய்வுபெற்ற முல்லை வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சரவணபவன், மாகாணக்கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையைத் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# வசதிகள் அற்ற நிலையில் இயங்கும் அடம்பன் மத்திய மகாவித்தியாலயம்

(மன்னார்)

மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலயம் பல்வேறு நெருக்கடிகளுடன் இயங்கிவருகின்றது.

இந்தப் பாடசாலை படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர் நடவடிக்கைகள் காரணமாக இரண்டுக்கும் மேற்பட்ட தடவைகள் இடப்பெயர்வுகளைச் சந்தித்தது.

தரம் ஒன்று முதல் பதின் மூன்று வரையான வகுப்புக்களைக் கொண்ட இந்தப் பாடசாலையில், தற்போது அறுநூறு வரையான மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தப் பாடசாலைக்கு நிர்வாக அலுவலகம், விஞ்ஞான ஆய்வு கூடம், ஆசிரியர் விடுதி போன்ற வசதிகள் முற்றாக இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இதேவேளை - மன்னார் சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் இரண்டு உயர்மாடிக்கட்டடங்கள், வகுப்பறைக்கட்டடங்கள் என்பன இதுவரையில் முழுமையாக அமைக்கப்படவில்லை.

இந்தத் திட்டத்தின்மூலம் அமைக்கபபடுகின்ற இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டு ஒப்படைப்பதற்கான இறுதித் திகதி, கடந்த மார்ச் மாதம் மூன்றாம் திகதி என்றும், இதுவரையில் அந்தப் பணிகள் பூரணப்படுத்தப்பட்டு வழங்கப்படாமையால், தொடர்ந்தும் மாணவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர்.

இந்தப் பாடசாலைகளில் நான்கு வகுப்பறைகளுக்குத் தளபாட வசதிகள் பூரணப்படுத்தப்படாமையும் குறிப்பிடத்தக்கது.

# நீண்டகாலமாக புனரமைக்கப்படாத பூநகரி வாடியடி - கல்முனை வீதி



படம் - திரு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டம் பூநகரியில் - வாடியடிச் சந்தி முதல் கல்முனை வரையான வீதி எதுவித புனரமைப்புமின்றி காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் மறவன்குறிச்சி, வெட்டுக்காடு, கௌதாரிமுனை, கல்முனை உட்பட்ட கிராமங்களில், 12 ஆண்டுகளின் பின் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். இந்த மக்களுக்கான அடிப்படை போக்குவரத்து வசதியோ, வீதியமைப்புகளோ இல்லை. பாரியளவு குழிகள் நிறைந்ததாக, மணல் நிறைந்ததாக வீதிகள் உள்ளதால், இங்கு போக்குவரவில் ஈடுபடும் மக்கள் துன்பமுறுகின்றனர். இந்தப் பகுதிகளில் சைக்கிள்களே மக்களின் அடிப்படை போக்குவரத்து வாகனமாகும்.

இந்தப் பகுதியில் இராணுவத்தினர் முன்னர் முகாம் அமைத்திருந்த போதில், அமைத்திருந்த முட்கம்பிகளும் வீதியோரங்களில் காணப்படுகின்றன.

மணல் ஏற்றும் லொறிகள், உழவு இயந்திரங்களும் இந்த வீதிகளை இன்னமும் குழிகளாக்குகின்றன. பூநகரி - பள்ளிக்குடா வீதி, பூநகரி - வலைப்பாடு வீதி, பல்லவராயன்கட்டுச்சந்தி - கிராஞ்சி வீதி, திருமுறிகண்டி- பல்லவராயன்கட்டுச்சந்திவீதி என்பனவும் எதுவித புனரமைப்புமின்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீதி ஒழுங்குகள் குறித்து

# தமிழீழ காவல்துறையினரால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்

(கிளிநொச்சி)

தமிழீழக் காவல்துறையின் வீதிப போக்குவரவுப் பிரிவினரால், போக்குவரத்து ஒழுங்குமுறைகள் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டன.

ஏ 9 வீதி மற்றும் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

ஏ9 வீதியில் தமிழீழக் காவல் துறை நடுவப்பணியகத்துக்கு முன்பாக, வவுனியா நோக்கிய திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுக்கும், யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகன சாரதிகளுக்கும் வீதிப்போக்குவரவு ஒழுங்கு முறைகள் தொடர்பான துண்டுபிரசுரங்கள் வழங்கப்பட்டன.

இதேபோன்று புதுக்குடியிருப்பிலும், இந்தத் துண்டுப்பிரசுர விநியோகம் இடம்பெற்றது.

இந்த நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று தமிழீழக் காவல்துறையின் குற்றத் தடுப்புப் பிரிவுக் கண்காணிப்பாளர் இயலரசன் தெரிவித்தார்.

## தாயகம் திரும்பிய 1500 குடும்பங்கள் வன்னியில் மீள்குடியமர்வு

இடம் பெயர்ந்து தமிழ் நாட்டில் வாழ்ந்துவந்த 1500 குடும்பங்களைச் சேர்ந்த ஈழத்தமிழர்கள், இந்த ஆணடு தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்த ஆண்டு இதுவரையிலும் ஆயிரத்து ஐநூறு குடும்பங்களைச் சேர்ந்தோரும், 2003 ஆம் ஆண்டு 971 குடும்பங்களைச் சேர்ந்தோரும் தாயகம் திரும்பியுள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட அரச அதிபர் வெ.விஸ்வலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்,

கடல் வழிப்பயணத்தினால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுவருவதாகவும்,

இதற்குத் தீர்வு காணும் வகையில் தனியார் படகுகளின் உதவியுடன் இராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையில் படகுப் போக்குவரத்தை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்த அவர், இது குறித்து யு.என்.எச்.சி.ஆர் இடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# சிறுவர்களுக்கு தொழிற்பயிற்சி நிலையம் மன்னாரில் அமைப்பதற்கு நடவடிக்கை

(மன்னார்)

இராணுவ நடவடிக்கைகளின் போது, பாதிக்கப்பட்ட மற்றும் சமூகத்தினால் ஒதுக்கப்பட்ட சிறார்களுக்கென தொழில் பயிற்சி நிறுவனமொன்று அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் வட்டககண்டல் அரசியற்துறை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அடம்பன் பிரதேச தேசிய எழுச்சிப பேரவைச் செயலாளர் சந்தியாகு தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின போது, சிறார்களுக்கென அமைக்கப்படவுள்ள தொழிற்பயிற்சி நிறுவன செயற்பாட்டுக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் குழுவின் காப்பாளர்களாக, மனனார் மாவட்ட அரச அதிபர் வெ.விஸவலிங்கம் மற்றும் மன்னார்- மடு ஆகியவற்றின் கல்விப்பணிப்பாளர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இதன் தலைவராக முன்னாள் கல்விப்பணிப்பாளர் ஜேக்கப் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த தொழிற்பயிற்சி நிறுவனத்துககான கட்டடத்தை அமைபதற்கென 25 ஏக்கர் நிலப்பரப்பு கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முக்கிய கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குட்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான அவசர கூட்டமொன்று இன்று காலை 10 மணிக்குப புதுக்குடியிருப்பிலுள்ள அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.





படங்கள் - பாஸ்கரன்

நேற்று முன்தினம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழீழ வரலாற்றுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் வெற்றிபெற்ற மாணவியொருவருக்குப் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் பரிசு வழங்குவதை முதலாவது படத்திலும், மற்றுமொருமாணவிக்கு தமிழீழக் காவல்துறைத் துணைபொறுப்பாளர் மாதவன் பரிசு வழங்குவதை மற்றைய படத்திலும் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அரசுக்குள் முற்றிவரும் முறுகல்நிலை

கொள்கை ரீதியிலான முழுமையான முரண்பாடுகளையும், பழமை மிகுந்த பகையுணர்வையும், அரசியலில் மட்டுமல்ல தனிப்பட்ட முறையிலும் கிட்டத்தட்ட- மூன்று தசாப்த காலமாகவே கொண்டிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் - ஜே.வி.பியினரும் தேசிய நலனில் அக்கறை கொள்ளாது, தத்தமது தனிப்பட்ட அரசியல் இலாபங்களை மட்டுமே கருத்திற்கொண்டு, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையிலான ஐ.தே. முன்னணி ஆட்சியைக் கலைத்து சமாதான முன்னெடுப்புக்களுக்கு இடையூறு விளைவிக்கும் முதன்மை நோக்குடன் அரசியலில் கூட்டணி அமைத்தபோதே, ஒருவரை மற்றவர் காய்வெட்டும் உத்தியை கனகச்சிதமாக பிரயோகிக்கத் தொடங்கிவிட்டனர் என்றால் அதில் மிகையில்லை.

1971 ஆம் ஆண்டில் வர்க்கப்புரட்சி - விவசாயி - தொழிலாளர்களிடையே எழுச்சி என்றெல்லாம் திட்டங்கள் போட்டுக் கொண்டு நாடாளுமன்ற ஜனநாயக அரசியலை முற்றாகவே நிராகரிக்கும் பொதுவுடமைக் கோட்பாடுகளைக் கோஷித்தபடி, ஆயுதப்போராட்டம் என்ற பெயரில் அரைகுறைக் கிளர்ச்சி ஒன்றை அப்போதைய சிறிமாவோ அரசுக்கு எதிராக ஆரம்பித்த ஜே.வி. பியினரை, இந்திய இராணுவ உதவியுடன் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஈவிரக்கமின்றித் தென்னிலங்கையில் இரத்த ஆறொன்றை ஓடவைத்து அடக்கினார்.

அந்த 1971 இன் கிளர்ச்சி- சுமார் 25000 இற்கும் மேலான அப்பாவிச் சிங்கள இளைஞர்கள், யுவதிகளின் அழிவுடன் படுமோசமான தோல்வியைச் சந்தித்தது.

1977 இல் ஜெயவர்த்தனா ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்து விடுதலை செய்யப்பட்ட - 1971 இன் கிளர்ச்சி நடவடிக்கைக் கைதிகளான ஜே.வி.பியின் தலைவர் றோகண விஜேவீரவும் அவரது தோழர்களும் ஜனநாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு அரசியலில் மறு பிரவேசம் செய்யமுன்றது அவர்களின் முதலாவது கொள்கை ரீதியிலான ...த்துக் கரணமாகும்.

பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆகும் ஆசையும் றோகண விஜேவீரவுக்கு ஏற்பட்டமையானது, அவரது மோசமான சித்தாந்தப் பலவீனத்தின் வெளிப்பாடாகவே அமைந்ததுடன், ஜே.வி.பியினரின் சிவப்புச் சாயமும் வெளிற ஆரம்பித்தது.

1987 வரை அரசியல் அநாமதேயங்களாக இருந்த ஜே.வி.பியினர் மீண்டும் தமது இரத்த வெறிமிக்க சண்டித்தன அரசியலுக்குள் நுழைந்து, தமது இயல்பை வெளிப்படுத்த- இந்திய இலங்கை உடன்பாடும், அதனைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தினரின் வருகையும் வழிகோலியது. அவர்களின் ஆரம்பகால இந்திய விஸ்தரிப்பு வாத எதிர்ப்புக் கொள்கையை முன்வைத்து மீண்டும் கிளர்ச்சியை ஆரம்பித்த ஜே.வி.பி.யினரின் இந்திய எதிர்ப்பு மற்றும் பிரேமதாஸ ஆட்சியெதிர்ப்பு நடவடிக்கைகள் தென்னிலங்கையை கதிகலங்க வைத்தது என்னமோ உண்மைதான். ஆனால், அதனை பிரேமதாஸ ஆயுத முனையில் அடக்க எடுத்த முறை கொடூரமானது. தென்னிலங்கை ஆறுகள் சடலங்களைச் சுமந்தவாறு இரத்தமயமாக ஓடிய காலமதுவாகும். முடிவில் றோகண விஜேவீர உட்பட ஜே.வி.பியின் சிரேஷ்ட தலைவர்களின் மரணத்துடன் அந்தக் கிளர்ச்சியும் தோற்கடிக்கப்பட்டது.

ஆக, சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, ஜே.வி.பியை ஒடுக்குவதில் நியாய தர்மம் பார்த்ததே கிடையாது. அவ்வாறு அவர்கள் ஒடுக்கப்படுவதற்கு ஜே.வி.பியினரின் முட்டாள்தனமான தொலை நோக்குச் சிந்தனையற்ற நடவடிக்கைகளும் காரணமாகும்.

1994 இல் சந்திரிகாவின் அரசியல் பிரவேசத்திற்கு அவரது கணவரான நடிக அரசியல்வாதி விஜய குமாரணதுங்கவின் படுகொலையும் முக்கிய காரணமாகும். அவரைக் கொன்றது ஜே.வி.பியினர் தான் என்பது சந்திரிகாவே பகிரங்கமாக ஒப்புக கொண்ட விடயமாகும்.

சந்திரிகா தன் வாயாலேயே கொலைகாரர்கள் என ஜே.வி. பியினரை விரல் சுட்டிக் காட்டி குற்றஞ்சுமத்தியதும், பதிவு செய்யப்பட்ட வரலாறாகவே உள்ளது.

இன்று அந்தக் கொலைகாரக் கிளர்ச்சிக்காரர்களுடன் கூட்டு வைத்து அரசியல் மேற்கொள்ளும் ஜனாதிபதியின் உள்நோக்கம் தான் என்ன?

அரசியலில் எதிரியும் இல்லை, நண்பனும் இல்லை. என்ற தத்துவத்தை அவர் நம்புகிறாரா?

அல்லது ஜனாதிபதி ஜே.வி.பியை பொறிக்குள் விழ வைக்கத் திட்டமிட்டு, ஜே.வி.பி இவருக்கு வைத்த பொறிக்குள் சிக்கி விடுபட முடியாது திண்டாடுகிறாரா?

வெளிப்படையாகத் தெரியும் உண்மை என்னவெனில்- ஜனாதிபதி தனது கூட்டணிக்குள் ஜே.வி.பியை ஒண்ட இடங் கொடுத்த குற்றத்தின் பலனை அனுபவிக்கிறார் என்பதே ஆகும்.


இன்றைய ஐ.ம.சு முன்னணி அரசைத் தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முயலும் ஜே.வி.பியினரின் ஆக்கிரமிப்பு ஆதிக்க வலையிலிருந்து விடுபட ஜனாதிபதி திக்குமுக்காடுகிறார் என்பதே உண்மையாகும்.

கூடாத கூட்டத்துடன் கூடினால் என்ன நடக்கும் என்பது இப்போது ஜனாதிபதிக்குப் புரிந்தாலும், அதனை விட்டுவிலகும் துணிச்சல் அவருக்கில்லை. இதன் காரணமாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் கூட, தேசிய நலனை முதன்மைப்படுத்தி நடவடிக்கையெடுக்க அவரால் முடியாமலுள்ளதுதான் அவரது நிறைவேற்று அதிகார பலத்தை மிஞ்சிய பலவீனமாகவும் உள்ளது.

தற்போது ஐ.ம.சு முன்னணிக்குள் அரசல்புரசலாக இருக்கும் ஆளுமைப் போட்டி ஜனாதிபதியின் அமைச்சுமாற்றச் செயற்பாடுகளால் மேலும் வெளிப்படையான மோதலாகி ஜே.வி.பியினர் ஜனாதிபதியை எச்சரிக்கும் கட்டத்திற்கு முற்றியுள்ளது.

ஒண்ட இடம் கொடுக்க மடமே தன்னுடையதென உரிமை கோர முயலும் ஜே.வி.பியினரின் செயற்பாட்டால்- ஜனாதிபதி எரிச்சலும், கோபமும் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் இலங்கை அரசியலிலும், ஆட்சியிலும் அடுத்து வரும் வாரங்கள் முக்கியமானவைகளாக இருக்கப் போகிறது என்பதில் ஐயமில்லை.

## நாடும் நடப்பும்




# ரெலிகொம் தலைமையிலிருந்து திலங்க சுமதிபால விலகினார்!

(கொழும்பு)

இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் தலைமை பொறுப்பிலிருந்து தான் விலகிக் கொள்வதாக திலங்க சுமதிபால கடந்த வெள்ளியன்று அறிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட திலங்க சுமதிபால - பல்வேறு சவால்களின மத்தியில் ரெலிகொம் நிறுவனத்தை முன்மாதிரி அமைப்பாக உயர்த்தியதாக குறிப்பிட்டார்.

தொடர்ந்து பதவியேற்கும் தலைவர் ரெலிகொம் நிறுவனத்தை முன்னேற்றகரமான பாதையில் கொண்டு செல்வதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என வேண்டுகோள்விடுத்த அவர் 4 வருடங்களுக்கு மேலாக சமயா சமய ஊழியர்களாக பணிபுரியும் அனைவரும் நிரந்தர ஊழியர்களாக்கப்படுவார்கள் என்றும் உறுதியளித்தார்.

## தகவல் மற்றும் தொடர்பாடல் கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான திட்டத்தின் கீழ் ஒக்டோபர் மாதம் சுழிபுரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தகவல் மற்றும் தொடர்பாடல், தொழிநுட்பத்தில் தேசிய சான்றிதழ் பயிற்சி நெறிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் (கணிதம், ஆங்கிலம் திறமைச் சித்தி உட்பட) சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் ஏதேனும் நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியுடன் 6 பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

அல்லது இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த. சாதாரண தரத்தில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதேனும் 2 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் சித்தியடைந்த பாடங்களுடன் கல்வித் தகைமை ஆகியவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை - மாகாணப் பணிப்பாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 20-08-2004 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு மாகாணப் பணிப்பாளர் ராமநாதன் அறிவித்துள்ளார்.

## நியாப் வேலைத்திட்டங்களை பார்வையிட வருகிறது உலகவங்கி அதிகாரிகள் குழு

யாழ்.மாவட்டத்தில் நியாப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயவென உலக வங்கிக்குழுவொன்று அடுத்தமாதம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது.

அடுத்த மாதம் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் வருகைதரவுள்ள இந்தக் குழுவிற்கு எந்திரேனி கால் பெர்னாண்டோ தலைமைதாங்குவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழவினர் யாழ். செயலகத்தின் அதிகாரிகளைச் சந்திப்பதோடு நியாப் திட்டப் பணிகளையும் பார்வையிடவுள்ளனர். இந்தக்குழுவுடன் நியாப் திட்டமுகாமையாளர்களும் வருகைதரவுள்ளதாக தெரியவருகிறது. (ப)

## 30 ஆயிரம் சிறார்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம்

### யுனிசெப் அறிக்கைகள் மூலம் தெரியவருகிறது

நாட்டில் 30 ஆயிரம் சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனத்தின் அறிக்கைகள் மூலம் தெரியவருவதாக சிறுவர் அமைப்பின் தலைவர் சி.நவரட்ண தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் வரும் வெளிநாட்டவர்களாலேயே அதிக சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்படுகின்றனர். நாட்டில் கரையோரங்களில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளன. குடும்பத்து வறுமை, பெற்றோர்களின் அறியாமை போன்றகாரணங்களாலேயே இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதற்கு பெற்றோர்கள் எந்தவித எதிர்ப்பும் காட்டுவதில்லை. நாட்டில் யுத்தம் காரணமாகவே 50 ஆயிரம் சிறுவர்கள் பெற்றோர்களை இழந்துள்ளனர். எனவே இவர்களில் ஒரு பகுதியினர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலை நீடிக்குமாயின் நாட்டில் பாலியல் தொடர்பான நோய் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால், பெற்றோர்கள் சிறுவர் பராமரிப்பு அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சுகாதார அமைப்புக்கள், காவல்துறையினர் போன்றோர் இதனைத் தடுப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (17)

# விவசாயிகளின் நலன்களைப் பேண உதவுமாறு மகஜர் மூலம் கோரிக்கை

## நெடுந்தீவு விவசாய சம்மேளன செயலர் கையளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலுள்ள விவசாயிகள் நன்மைகருதி அங்கே கமநல கேந்திர நிலையம் ஒன்றை அமைத்து, அதன் மூலம் உரிய காலங்களில் விவசாய உள்ளீடுகள், கிருமிநாசினி வகைகள், உரவகைகள் மற்றும் உழவு இயந்திரம், மருந்து-தெளிகருவிகள் போன்றவற்றை போதியளவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு புங்குடுதீவு கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தருக்கு, நெடுந்தீவு கிழக்கு விவசாய சம்மேளனச் செயலாளர் எஸ்.சச்சிதானந்தம் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்தார்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

நன்னீர் நிலைகள் குறைவாக இருப்பதனால் தூர்வடைந்துள்ள விவசாயக் குளங்களை ஆழமாக்கி மழைநீரைத் தேக்குவதுடன், மழைநீரை சேகரிக்க வீடுகள் தோறும் நீர்த் தொட்டிகள் அமைத்து அதன் மூலம் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவித்தல், காணிகள் அற்றவிவசாயிகளுக்கு, விவசாயம் செய்யும் வகையில் அரச காணிகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுத்தல், கடனடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவி போன்றவற்றை வழங்கல் மற்றும் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவற்றுடன், தென்னைச் செய்கையை ஊக்குவிக்க மானியம் வழங்கல், நல்லின கால்நடைகளை வழங்கி, கால்நடை அபிவிருத்தியை மேற்கொள்ளல் மற்றும் தேனி வளர்ப்பை அறிமுகப்படுத்தி ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், நெடுந்தீவுப் பிரதேச வறிய விவசாயிகள் பெரும் பயனடைவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதியொன்று நடவடிக்கைக்காக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# யாழ்.வணிகர் கழகம் நடத்தும் கைத்தொழில் கண்காட்சி

உள்ளூர் நடுத்தர சிறுகைத் தொழில்களை முன்னேற்றும் வகையில் யாழ். வணிகர் கழகத்தினால் பிரமாண்டமான கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்த கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. வட-கிழக்கு மாகாண உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்தி தரங்களை முழுமையாக மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கும் இவற்றின் பயன்பாடுகளை மக்கள் பெற்றுக் கொள்வதற்குமாக இந்தக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இந்த கண்காட்சிக்கு தென்பகுதி சிறுநடுத்தர உற்பத்தியாளர்களும் வரவழைக்கப்படவுள்ளனர்.

இதில் தமது உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்த விரும்புவோர் உடனடியாக வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இந்த கண்காட்சியில் பங்கு கொள்பவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ். வணிகர் கழகத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதே வேளை யாழ்.மாவட்ட உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி மூலப் பொருட்கள், இயந்திரங்கள் இறக்குமதி போன்றவற்றிற்கும், தமது உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் யாழ். வணிகர் கழகத்தினால் உதவிகள் மேற்கொண்டுள்ளது என யாழ். வணிகர் கழக சங்கத் தலைவர் இ.ஜெயராஜா தெரிவித்தார். (தே)

## தமிழ் இலக்கிய விழா

தமிழ் இலக்கிய விழா இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8 ஆம், 9, 10 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில், வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கலை நிகழ்வுகளும், ஊர்வலங்களும் நடைபெறவுள்ளன. நல்லூர் கலாசார அலுவலரால் தமிழர் பண்பாடு ஊர்தியும், வடமராட்சி வலயகலாசார அலுவலரால் - இன்றைய பண்பாடு நிகழ்வுகளும், தென்மராட்சி கலாசார அலுவலரால் சிலப்பதிகார காட்சியும், வலிகாமம் கலாசார அலுவலர்களால் மகாபாரதக் காட்சியும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## யுவதிகளுக்கான பயிற்சி வகுப்புகள

யாழ்ப்பாணம் சமூக செயற்பாடு மையத்தின் கச்சாய் கிளையில் நளை முதல் பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்புக்களில் தையல் பெயின்ரிங், கேக் ஐசிங், தலை அலங்காரம் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இதில் இணைந்து கொள்ளவிரும்பும் யுவதிகள் அலுவலக இணைப்பாளர் சி.சுகந்தியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) வெற்றிடமான பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

சங்கத்தின் நிரந்தர ஆளணி நியமனத்துக்கான கீழ் காணும் பதவிகளுக்கான வெற்றிடம் எமது சங்கப் பணியாளர்களிடமிருந்தும், வெளிவாரியாகவும் கோரப்படுகின்றன. சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்திலேயே விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு "தலைவர், தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பளை." என்ற முகவரிக்கு 2004.08.16 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் - குறித்த பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும். கல்விச் சான்றிதழ், நற்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடத் தகைமையை பிறப்புச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடின் அந்த விளக்கம் குறித்த அத்தாட்சிப்படுத்தும் கடிதமும் அனுப்பப்படல் வேண்டும்.

வயது எல்லை 18 இற்கும் 40 இற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

### 1. பொதுமுகாமையாளர் 101/06

சம்பளத்திட்டம் 6000 - 9000 / 140x10-160x10

தகைமைகள்:

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 7 ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 8 ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 8 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், இந்த எட்டு வருடகால அனுபவத்தில் 2 வருடங்களுக்குக் குறையாமல் சிரேட்ட முகாமை மட்ட பதவி ஒன்றில் அனுபவம்.

அல்லது.

இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், இந்த பத்து வருடகால அனுபவத்தில் 2 வருடங்களுக்குக் குறையாமல் சிரேட்ட முகாமை மட்ட பதவி ஒன்றில் அனுபவம்.

### 2. ஆளணி முகாமையாளர் 113/08

சம்பளத்திட்டம் 5250 - 7750 / 120x10-130x10

தகைமைகள்:

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 9 ஆம் சம்பளத்திட்டத்தில் நிர்வாக முகாமையாளர்/ஆளணி முகாமையாளர்/காரியாலய உதவியாளர் பதவி ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 10 ஆம் சம்பளத்திட்டத்தில் நிர்வாக முகாமையாளர்/ஆளணி முகாமையாளர்/காரியாலய உதவியாளர் பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் நிர்வாகம்/ஆளணி முகாமை மற்றும் கைத்தொழில் தொடர்பு அலுவல்களில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) பட்டயம் பெற்ற செயலாளர் மற்றும் நிர்வாகஸ்தர் நிறுவன மத்திய பரீட்சையில் சத்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த் தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் நிர்வாகம/ஆளணி முகாமை மற்றும் கைத்தொழில் தொடர்பு அலுவல்க... முகாமை மட்ட பதவி ஒன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஈ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் நிர்வாகம்/ஆளணி முகாமை மற்றும் கைத்தொழில் தொடர்பு அலுவல்களில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

### 3. கணக்காளர் 104/08

சம்பளத்திட்டம் 5250 - 7750 / 120x10-130x10

தகைமைகள்:

அ. கூட்டுறவுச்சங்க ஊழியர் 9 ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவி ஒன்றில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்கஊழியர் 10 ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

ஆ. பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவனத் தேர்ச்சி சித்தி கட்டம், 1 அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

### 4. வர்த்தக முகாமையாளர் தகைமைகள் 106/09

சம்பளத்திட்டம் 5000-7300 / 110x10-120x10

தகைமைகள்.

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 10 ஆம் சம்பளத்திட்ட முகாமை அல்லது தொடர்புபட்ட துறையில் மேற்பார்வை மட்ட பதவியொன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச்சங்க ஊழியர் 11 ஆம் சம்பளத்திட்டத்தில் கீழ் அப்படிப்பட்ட பதவியொன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்கு சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் விற்பனவு அல்லது பொருட்கள் வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தல் அல்லது பொருட்கள் ஏற்றுமதி அல்லது இறக்குமதி அலுவல்கள் ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் முகாமை மட்டப் பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது

இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் விற்பனவு அல்லது பொருட்கள் வழங்குதல் மற்றும் இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் முகாமைமட்டப் பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

### 5. வங்கி சேவை முகாமையாளர் 111/08

சம்பளத்திட்டம் 5250 - 7750 / 120x10-130x10

தகைமைகள்.

அ. கூட்டுறவுச்சங்க ஊழியர் 9 ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்பு பட்டதுறையில் முகாமை அல்லது மேற்பார்வை பதவியொன்றில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 8 ஆம் சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறையில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

ஆ. சிறிலங்கா வங்கியாளர் நிறுவன வங்கி அலுவல்கள் டிப்ளோமா சான்றிதழ் பரீட்சை முதலாம் பகுதியில் சித்தியுடன் வர்த்தக வங்கி அலுவல்கள் பற்றி 2 வருடங்களுக்கு குறையாத அனுப்வம் அல்லது

இ. அங்கீகரிக்கப்பட்ட பல்கல்லைக்கழகம் ஒன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் வங்கி அலுவல்கள் பற்றிய 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

### எழுதுவினைஞர் 302/11

சம்பளத்திட்டம் 4500 - 6400 / 90x10 - 100x10

தகைமைகள்.

அ. கூட்டுறவுச்சங்க ஊழியர் 12 ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதவியியலாளர் அல்லது எழுதுவினைஞர் பதவி ஒன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 13 ஆம் சம்பளத் திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப்பதிவியலாளர் நிறுவன மத்திய பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அலுவல்கள் சம்மந்தமாக 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அலுவல்கள் சம்மந்தமாக 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

– சி.சிவமகாராசா
தலைவர் தெல்லிப்பளை, ப.நோ.கூ.சங்கம்

தெல்லிப்பளை.
30.07.2004




பருத்தித்துறை மலாயன் சாண்டோ நடராஜா உடற்பயிற்சிக் கழகம் நடாத்திய வடமாகாணத்திற்கான பவர் லிப்ரிங்ஸ் போட்டியில் ஆனைக்கோட்டை தேவாலய ஒழுங்கையில் அமைந்திருக்கும்

Life Style Fitness and Gym

இப்பயிற்சி நிலையத்தில் இருந்து போட்டியிட்ட ஆனைக்கோட்டையை வசிப்பிடமாய்க்கொண்ட இராசரத்தினம் சதீஸ்கரன் என்பவர் முறையே 297 கிலோ எடையை தூக்கி வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக்கொண்டார். இவரை இக்கழக சக மாணவர்களும் மனமார வாழ்த்துகின்றார்கள். மேலும் இன்றே

Life Style Fitness and Gym கழகத்தில் அங்கத்தவராக சேருங்கள்.

(797)

KINROSS TRAVELS

வழங்கும் விசேட சலுகை



கொழும்பு/சென்னை/கொழும்பு
கொழும்பு/சிங்கப்பூர்/கொழும்பு

விமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட சலுகை 3 நாட்கள் Hotel இலவசம். இச்சலுகை August 31 வரை மட்டுமே



KINROSS TRAVELS & TOURS
No. 344, Galle Road,
Bambalapitiya, Colombo - 04
T.P: 2504665, 4519924
Fax: 4519925

(சி/2790)

# அல்கொய்டாவின் முக்கிய உறுப்பினர் பாகிஸ்தான் படையினரால் கைது!

## உலக நோக்கு



(இஸ்லாமாபாத்)

கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள இரண்டு அமெரிக்கத் தூதரகங்கள் மீது, 1998ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு காரணமான அல்கொய்டா அமைப்பின் முக்கிய சந்தேகநபர், பாகிஸ்தான் மத்திய பகுதியில் வைத்து பாகிஸ்தான் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் தன்சானியா நாட்டைச் சேர்ந்த அகமட் ஹால் பான் லானி எனவும் இவரைக் காட்டித்தருபவர்களுக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர் தரப்படுமென அமெரிக்கா அறிவித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் மத்திய பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போதே, இவர் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தானின் உளதுறை அமைச்சர் பைசால் சாலே கயாத் தெரிவித்தார்.

இவர் கைதுசெய்யப்பட்டவேளை, இவரது உஸ்பெஸ்கிஸ்தான் -மனைவி மற்றும் இரண்டு தென்னாபிரிக்க நாட்டவர்களும் கைது செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னர் நைரோபி மற்றும் கென்ய நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரங்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இவரே முக்கிய சூத்திரதாரியாவார்.

கைது செய்யப்பட்ட இவர் தற்போது பாகிஸ்தான் சிறையில் வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும், ஆனாலும் -இவரை அமெரிக்காவிடம் கையளிப்பது குறித்து, இவர் மறுக்கவில்லையெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் கைதுசெய்யப்பட்டது பாகிஸ்தானுக்கு மிகப்பெரிய வெற்றியெனவும் அவர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க நாட்டவர் இருவர் கைது செய்யப்பட்டிருந்தாலும், அவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

ஆனால், இவர்களில் ஒருவர் வைத்தியரான பெரோஸ் காஞ்சி (வயது 30) மற்றையவர் மாணவரான சுபைர் இஸ்மாயில் (வயது 20) என தென் னாபிரிக்கப் பத்திரிகை தெரிவித்தது. இவர்கள் இருவரும் போலியான கடவுச்சீட்டை முடித்து பாகிஸ்தானுக்குள் சென்றிருக்கலாமெனவும் அந்தப் பத்திரிகை தெரிவித்தது. இதேவேளை, இவர்கள் இருவரது விபரங்களையும் அறிய தென்னாபிரிக்க அரசாங்கம் பாகிஸ்தானிடம் தொடர்பு கொண்டுள்ளது.

## காஸ் விநியோக குழாய் தீ

# தொழிற்சாலைக்கும் பரவியது 15 பேர் பலி; 120 பேர் எரிகாயம்

## பெல்ஜியத்தில் சம்பவம்

பெல்ஜியத்திலுள்ள காஸ் தொழிற்சாலையில் விநியோகக் குழாய் கசிவை சீர்செய்ய முயன்றவேளை ஏற்பட்ட தீ தொழிற்சாலைக்கும் பரவியதில் 15 பேர் உயிரிழந்ததுடன், 120 பேருக்கும் மேல் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலர் மோசமான எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் பெல்ஜியத்திலுள்ள தொழிற்துறை நகரமான புறூஸ்லெஸ்ஸில் நேற்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற பின்னர் அந்த இடத்தைப் பார்த்தபோது யுத்தமொன்று நடந்து, அழிவடைந்த நகர் போல காட்சியளிப்பதாக தீயணைப்புப் படைப்பிரிவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் இடம்பெற்ற சேதங்களை அகற்றுவதற்கு இராணுவத்தினர் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இந்தத் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுள்ளதுடன், நகரின் அருகில் வசிக்கும் வீட்டு உரிமையாளர்கள் தமது வீட்டு யன்னல்களை மூடிவைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பெல்ஜியத்திலிருந்து, பிரான்சிற்கு செல்லும் காஸ் குழாய் விநியோகத தொடரில் கசிவு ஏற்பட்டதாகத் தெரிவித்ததையடுத்து, அதனை சீர் செய்யச்சென்ற பலரே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸாரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த அழிவுகளுக்கு உதவ பிரான்ஸ் மருத்துவ உதவிகளையும், ஹெலிகொப்டர் வசதிகளையும் வழங்கியுள்ளது.



இந்தச் சம்பவம் தொடர்பாக உள்ளூர் மக்கள் அச்சமடையத் தேவையில்லையென அந்தப் பகுதி மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

விநியோகக் குழாய் மூலம் காஸே சென்றதாகவும், வேறு வகை இரசாயன திரவியம் எதுவும் செல்லவில்லையெனவும் அவர் தெரிவித்தார். சம்பவ இடத்திற்கு உள்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் சென்ற அதேவேளை, தனது விடுமுறையைக் கழிக்க இத்தாலி சென்ற பெல்ஜிய பிரதமரும், அதனை இரத்துச் செய்துவிட்டு நாடு திரும்பியுள்ளார்.

# பலஸ்தீன உலோக தொழிற்சாலை மீது இஸ்ரேல் ஹெலி ஏவுகணைத் தாக்குதல்

பலஸ்தீனத்திலுள்ள உலோகத் தொழிற்சாலை மீது இஸ்ரேல் ஹெலிகொப்டர்கள் ஏவுகணைத் தாக்குதலை நேற்றுமுன்தினம் நடத்தியுள்ளன.

இந்தத் தாக்குதலில் அந்தப் பகுதியில் நின்ற இரண்டு பொதுமக்கள் படுகாயமடைந்ததாக, பலஸ்தீன வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். ஏவுகணைகளில் ஒன்று உலோகத் தொழிற்சாலை மீது வீழ்ந்து வெடித்ததில் அந்தத் தொழிற்சாலை தீப்பற்றி எரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டவேளை குறித்த தொழிற்சாலை வெறுமையாக இருந்ததாகவும், இந்தத் தொழிற்சாலையை ஹமாஸ் அமைப்பினர் குண்டுகள் தயாரிக்கப் பயன்படுத்துவதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

ஆனால், இந்தத் தொழிற்சாலை பொது மக்களினுடையதென பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, பலஸ்தீன ஆயுததாரிகள் இஸ்ரேலிய இடோறொட் நகர்மீது நேற்றுமுன்தினம் றொக்கட் தாக்குதலை நடத்தியுள்ளதாகவும், எவ்வித சேதங்களும் ஏற்படவில்லையெனவும் இஸ்ரேலியத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த நகரம் காஸாவின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளதால் அடிக்கடி பலஸ்தீன ஆயுததாரிகளின் றொக்கட் தாக்குதலுக்கு உட்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## பாகிஸ்தான் பிரதமராக

# பதவியேற்கவிருந்த சவுகத் அஜிஸை கொல்வதற்கு தற்கொலைத் தாக்குதல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமராக பதவி ஏற்க இருந்தவரை, கொல்வதற்கு மேற்கொண்ட குண்டு வீச்சில் 7 பேர் இறந்தனர்.

பாகிஸ்தானில் பிரதமராக இருந்த ஜமாலி, அதிபர் முஷாரப்புடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பதவி விலகினார். இதைத் தொடர்ந்து புதிய பிரதமராக சவுகத் அஜிஸ் தேர்ந்து எடுக்கப்பட்டார். இவர் தற்போது நிதி அமைச்சராக இருக்கிறார்.



பாகிஸ்தான் நாட்டின் அரசியல் சட்டப்படி பிரதமராக பதவி ஏற்க இருப்பவர்கள் தேசிய சட்டசபை உறுப்பினராக இருக்கவேண்டும். சவுகத் அஜிஸ் தற்போது மேல் - சபை உறுப்பினராக இருக்கிறார்.

எனவே, அவர் தேசிய சட்ட சபை உறுப்பினராக 'அட்டோக்' தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார். இந்தத் தொகுதியில் வருகிற 18ஆம் திகதி தேர்தல் நடக்கவிருக்கிறது.

நேற்றுமுன்தினம் சவுகத் அஜிஸ் தனது தொகுதியில் உள்ள பதேஜங் என்ற நகரில் தேர்தல் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிவிட்டு, தனது காரில் ஏற நடந்து வந்தார்.

அப்போது திடீர் என்று தற்கொலைப் படையினர் வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தினார்கள். இதில் சவுகத் அஜிஸின் கார் சாரதி உடல் சிதறிப் பலியானார். சவுகத் அஜிஸ் காயமின்றி உயிர் தப்பினார். இந்த வெடிகுண்டுத் தாக்குதலில் மொத்தம் 7 பேர் இறந்தனர். 25 பேர் காயம் அடைந்தனர்.

பிரதமராக பதவி ஏற்க இருக்கும் சவுகத் அஜிஸ் பத்திரமாக இருப்பதாக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர் ஹிசைன் செய்யத் தெரிவித்தார்.

## பலஸ்தீன - நப்லஸ் நகரில்

# ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட 3 வெளிநாட்டவர்களும் விடுதலை

பலஸ்தீனத்தின் - நப்லஸ் நகரில் ஆயுததாரிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்த மூன்று வெளிநாட்டவரும், இரண்டு மணி நேரத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.



பிரிட்டன், அயர்லாந்து மற்றும் அமெரிக்க நாட்டவர்களே நேற்றுமுன்தினம் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டவர்களாவர்.

இந்த மூன்று வெளிநாட்டவருடன் பல வெளிநாட்டுப் பெண்கள் இருந்ததாகவும், இதனாலேயே இவர்கள் மூவரும் விடுதலை செய்யப்பட்டதாகவும் பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்கள் மூவரும் கடத்தப்பட்டதற்கு என்ன காரணமென்பது தெரியவில்லை. இந்தக் கடத்தலை அல்- அக்சா மார்ட்டியஸ் பிரிகேட்டே செய்திருக்க வேண்டுமெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடத்தி விடுதலை செய்யப்பட்ட மூவரும் நப்லஸிலுள்ள தேவாலயமொன்றில் தொண்டர்களாகப் பணிபுரிபவர்களெனவும் மூன்று வாரங்களுக்கு முன்னரே இவர்கள் இந்த இங்கு வந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜெனின் நகரிலுள்ள ஆளுநரின் தலைமையலுவலகம் மீது, நேற்றுமுன்தினம் மாலை ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். ஆயுததாரிகளுக்கான நிதியுதவியை வழங்குவதற்கு ஜெனின் நகர ஆளுநர் மறுத்ததாலேயே இந்தத் தலைமையலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸாப் பகுதியில் வளர்ந்துவரும் வன்செயல்களால் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் கடும் அழுத்தங்களுக்குள்ளாகி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வெள்ளத்தில் காணாமற்போன மகன் 16 வருடத்தின் பின் தாயைச் சந்தித்தார்

(ஹோசியார்பூர்)

பஞ்சாப் மாநிலம் - ஹோஷியார்பூர் மாவட்டம் அப்துல்லாபூர் கிராமத்தைச் சேர்ந்தவர் இந்தர்சிங். இவரது மனைவி சாட்டோ பாய். இவருக்கும் 4 மகன்கள். விவசாய குடும்பத்தைச் சேர்ந்த இந்தர்சிங் தனது மகன்கள், வயதான பெற்றோர், சகோதரர், சகோதரி ஆகிய 10 பேருடன் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தார்.

1988ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பஞ்சாப்பில் மிகப் பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பியாஸ் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அப்துல்லாபூர் நகரம் வெள்ளத்தில் மூழ்கியது.

இதில் இந்தர்சிங் குடும்பம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. இந்தர்சிங் மட்டும் உயிர் தப்பினார். அவரது மனைவி சாட்டோ பாய் கபூர்தலா மாவட்டம் தில்வான் கிராமம் அருகே உயிருடன் மீட்கப்பட்டார்.

மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. மற்ற 8 பேரும் பலியாகிவிட்டதாக கூறிய இந்தர்சிங் குடும்பத்தினர் இறுதிச் சடங்கையும் நடத்தி முடித்துவிட்டார்.

இந்தச் சம்பவம் நடந்து 16 ஆண்டுகள் ஆகிவிட்டன. சாட்டோபாய் பக்கத்து மாவட்டங்களுக்கு விவசாய வேலைகளுக்குச்சென்று வந்தார்.

சில நாட்களுக்கு முன்பு விவசாயத் தொழிலாளர்கள் ஒரு உழவு இயந்திரத்தில் பக்கத்து மாவட்டத்துக்குச் சென்றனர். அதில் சாட்டோ பாயும் வேலைக்குச் சென்றார்.

அவருக்குப் பக்கத்தில் 18 வயது இளைஞர் உட்கார்ந்து இருந்தார். அவருடன் சாட்டோபாய் பேச்சுக் கொடுத்தார். அந்த இளைஞர்தான் ஒரு அனாதை என்றும், தனது குடும்பம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது என்ற கண்ணீர் கதையை கூறினார்.

இதைக் கேட்டதும் சாட்டோபாய்க்கு இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. 16 வருடத்துக்கு முன் தனது குடும்பம் வெள்ளத்தால் அடித்துக் செல்லப்பட்டதைச் சொன்ன அவர் "நீ என் மகன்தான்" என்று சொல்லி அந்த இளைஞனை மெய்சிலிர்க்க வைத்தார்.

தாயும் - மகனும் 16 வருடம் கழித்துச் சந்தித்ததில் ஏற்பட்ட ஆனந்தத்தைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. இருவரது கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது.

குழந்தையாகப் பிரிந்த மகனை இளைஞனாகத் திரும்பப்பெற்ற பெற்றோர் மகிழ்ச்சி பொங்க அழைத்துச் சென்றனர்.

# கணவனைக் கொன்று கறியாக்கி உண்ட மனைவி


## சீனாவில் சம்பவம்

சீனாவில் ஒரு பெண் தன் சூதாடிக் கணவனை அடித்துக்கொன்று தின்றாள். அவள் பெயர் ஜரங் ஷ்சென் ஜிலின் மாநிலத்தைச் சேர்ந்தவள் அவள் கணவன், அவளைத் தனியே விட்டு விட்டு அடிக்கடி சூதாடுவதற்குப் போய் விடுவான். இதனால் மனம் வெறுத்த அவள் கடந்த ஏப்ரல் மாதத்தில் ஒருநாள் அவனுடன் சண்டை போட்டாள். இந்தச் சண்டையின்போது அவள் தடியால் அடித்து கணவனைக் கொன்றாள். பிறகு அவன் உடலை வெட்டி கறியாக சமைத்துச் சாப்பிட்டாள். எஞ்சியதை ஒரு பானையில் போட்டு வைத்தாள்.

பின்னர் அவளைப் பொலிஸார் கைது செய்தனர். அவள் பொலிஸிடம் கூறுகையில், "என் கணவர் எப்போதும் என்னுடன் இருக்க வேண்டும் என்று விரும்பினேன். அதனால் தான் அவர் உடலை நான் தின்றேன்" என்று குறிப்பிட்டாள். பொலிஸார் அவள் மீது நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். நீதிபதி அவளுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கை சமாதான முயற்சிக்கு இந்தியா பூரண ஆதரவளிக்கும்!




தாய்லாந்தின் தலைநகர் பாங்ஹொங்கில் - 7 நாடுகள் பங்குபற்றிய வின்ஸ்ரெற் மாநாடு நடைபெற்று முடிந்த பின்னர், 7 நாட்டுத் தலைவர்களும் ஒன்றாக நின்று எடுத்த படத்தைக் காணலாம்.

## சந்திரிகாவிடம் மன்மோகன்சிங் தெரிவிப்பு





(பாங்ஹொங்))

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தமது அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என இந்தியப் பிரதமர் மன் மோகன்சிங் உறுதியளித்தார்.

பாங்ஹொங்கில் நடைபெறும் வின்ஸ்ரெற் மாநாட்டுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நாட்டின் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பிரதமருக்கு விளக்கமளித்தார்.

இதன்பின்னரே - இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் பூரண ஒத்துழைப்பை வழங்குமெனத் தெரிவித்தார்.

## ஏழு விடுதலைப்புலிகள் அதிரடிப் படையால் கைது !

சயனைட் வில்லைகள் வைத்திருந்தார்கள் எனத் தெரிவித்து ஏழு விடுதலைப்புலிகள் உறுப்பினர்களை அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த ஏழு விடுதலைப்புலி உறுப்பினர்களும் வானொன்றை வாடகைக்கு அமர்த்தி சாரதி, நடத்துனர், மற்றுமொருவர் உட்பட பத்துப்பேர் கோமாரியில் இருந்து கொக்கட்டிச்சோலைப் பகுதிக்கு சென்றுகொண்டிருந்தனர்.

இவ்வாறு சென்றுகொண்டிருந்தவர்களை அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையினரின் முகாமிற்கு முன்னால் மறித்து, சோதனை செய்த அதிரடிப்படையினர் இரண்டு சயனைட் வில்லைகளைக் கண்டெடுத்ததுடன், விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஏழு பேருடன் மற்றைய மூவரையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இவர்களை அதிரடிப்படையினர், அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் அனைவரும் இன்று அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் விசேடமாக ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

## புளொட் மோகன் நேற்று...

கந்தையா யோகராசா (வயது 41) என அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

-இவர் கொழும்பு நகரில் வசித்து வந்தவரெனவும் திருமணமான இவருக்கு 3 பிள்ளைகள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர் அத்துருகிரிய மிலேனியம் சிற்றி பகுதியில் இருந்த இராணுவப் புலனாய்வுத் துறை இரகசிய மறைவிடம் ஒன்றின் பொறுப்பாளராக செயற்பட்டவர் எனக் கருதப்படும் கப்டன் சாகுல் ஹமீத் நிலாமின் சகாவாகச் செயற்பட்டு வந்தார் எனக் கூறப்படுகிறது.

1983 ஆம் ஆண்டு புளொட்டில் இணைந்த இவர் 1993 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை புளொட் இயக்கத்துடன் இணைந்து செயற்பட்டவராவார். இந்தியாவில் இராணுவப் பயிற்சி பெற்ற இவர் 1987 இன் ஆரம்ப கட்டத்தில் இலங்கை திரும்பி, முள்ளிக்குளத்தில் முகாமிட்டு இருந்தார்.

மட்டக்களப்பில் புளொட் இயக்கத்தின் அன்றைய அரசியற்துறைச் செயலர் வாசுதேவா உள்ளிட்ட குழுவினர் கொல்லப்பட்ட பின்னர், அங்கு சென்ற இவர் புளொட்டின் மட்டக்களப்பு மாவட்ட உதவி இராணுவப் பொறுப்பாளராகத் தொழிற்பட்டார்.

1993 ஆம் ஆண்டு காலப் பகுதியில் புளொட்டுடன் முரண்பட்ட மோகன் புளொட் இயக்கத்திலிருந்து பிரிந்து தனியே சென்ற பின் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை, நீண்ட தூரம் ஊடுருவித் தாக்கும் இராணுவப் படையணியின் அச்சாணியாக தொழிற்பட்டவராகக் கருதப்படும் மோகன், கடந்த 10 வருடங்களாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான பல நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டவர்.

விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் உட்பட பலர் மீதான ஊடுருவித் தாக்குதல்களுக்கும், கொலைகளுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரதான பங்கினை வகித்தவர்.

புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா மட்டக்களப்பில் இருந்த வேளை, இராணுவப் புலனாய்வுத் துறையுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் என்றும், இதற்காக இவர் இரண்டு முறை தொப்பிகல காட்டிற்கு ·ஹெலி மூலம் சென்று வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துரிகிரிய மிலேனியம் சிற்றியை மையமாகக் கொண்டு செயற்பட்ட இராணுவத்தின் ஊடுருவித் தாக்கும் படையணியின் செயற்பாடுகளுடன் நெருங்கிய தொடர்பினை வைத்திருந்த புளொட் மோகனுக்கும்-

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் மகன் [illegible] ரத்வத்தைக்கும் இவருக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிகழ்ந்த பல தமிழினப் படுகொலைகளுக்கு நேரடியாகவும், இராணுவத்தினருடன் இணைந்தும்- காரணமாக இருந்தவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக சத்துருக்கொண்டான், வந்தாறுமூலை, கிழக்குப் பல்கலைக்கழக படுகொலைகளுக்கு காரணமான படையினருடன் இணைந்து செயற்பட்டவர்.

அத்துடன், வர்த்தகர்களிடம் கப்பம் அறவிடும் செயற்பாடுகளிலும் இவர் ஈடுபட்டு வந்தார். இவரது அடாவடித்தனங்களால் மட்டக்களப்பு மக்கள் பெரிதும் இன்னல்களை அனுபவித்து வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பட்டதாரிகள் நியமனம் குறித்து அரசாங்கத்துடன் விசேட பேச்சு!

### ஒருங்கிணைந்த சங்கம் திட்டம்

அரசாங்கத்தின் - பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு நியமனங்கள் தொடர்பாக, வேலையற்ற பட்டதாரிகளின் ஒருங்கிணைந்த சங்கம் அரசாங்கத்துடன் விசேட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளது

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தை அரசாங்கம் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பித்தது.

முதற்கட்டமாக 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில் பல குளறுபடிகள் இருப்பதாக நாட்டில் உள்ள பட்டதாரிகள் தெரிவித்திருப்பதாக சங்கம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் ஆராய்ந்து, இது தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரிக்க இருப்பதாக வேலையற்ற பட்டதாரிகளின் ஒருங்கிணைந்த சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை தயாரித்து முடிந்ததும், கூடிய விரைவில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக சங்கத்தின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## உடன் பேச்சுக்களை...

இவர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் உடனடியாகப் பேச்சுவார்தைக்கு செல்ல வேண்டியது முக்கியமானதாகும்.

அத்துடன் இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலைகளால் உதவி வழங்கும் நாடுகள் தமது உதவிகளை நிறுத்திக் கொள்வதற்கு வழிவகுக்கும்.

சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தராகச் செயற்படும் நோர்வேத் தரப்பினருக்கு அமெரிக்கா தனது பூரண ஆதரவை அளிக்கிறது.

தற்போதைய நிலைமையை பயன்படுத்தத் தவறினால் சர்வதேச உதவிகளையும் அமெரிக்காவின் ஒத்துழைப்பையும் இழக்க வேண்டி ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## 12 ஆயிரம் பட்டதாரி...

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் யாவும் பரிசீலனையிலுள்ளது எனவும், அவற்றில் முதற்கட்டமாக 17ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான பெயர்ப் பட்டியல் தற்போது வெளியிடப் பட்டுள்ளதாகவும்,. மேலும் 12 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருவதாகவும் அவர்களது பெயர்ப் பட்டியல் விரைவில் வெளியிடப்படுமெனவும் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான பத்திரிகை அறிவித்தல்கள் .காலக்கிரமத்தில் விடுக்கப்படவுள்ளதாகவும், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, யாழ். மாவட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பட்டதாரிகளின் விண்ணப்பங்களும், நேர்முகப் பரீட்சைப் பட்டியல்களும் பிரதேச செயலர்களினால் திறைசேரிக்கு ஒழுங்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அவை திறைசேரிக்குக் கிடைத்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. தகுதியுள்ள விண்ணப்பங்களும் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, இதனையிட்டு தமது பெயர்கள் தெரிவுப் பட்டியலில் வராதவர்கள் கலவரமடைய வேண்டியதில்லை என்பதை சகல தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்

இலங்கை அரசாங்க அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

- ❖ சிகை அலங்காரம் -10 (Hair Styles) - 07.08.2004 சனிக்கிழமை. (Latest)
- ❖ மணப்பெண் அலங்காரம் - 08.08.2004 ஞாயிற்றுக்கிழமை.

Dance Make - Up - நடன ஆசிரியர்களும், மாணவர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.

- ❖ facials, பொடுகு தொல்லை, முடி உதிர்தல் Permikng } 9 ஆம், 10 ஆம் திகதிகள் திங்கள், செவ்வாய்க்கிழமைகள்.
- ❖ மங்கு, மரு, கழுத்துக் கறுப்பு, கண்ணின் கீழ் கருவளையம், முகத்தில் பள்ளம், கரும்புள்ளிகள் போன்றவற்றுக்கு சிகிச்சைகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

திருமதி.நளினி சிவகுமாரன்.
(Nalines Beauty Parlour)
(Herbal & Aroma Therapy)



காலம் - ஆகஸ்ட் 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில்
காலை 10.00 - 4.00 Pm (புதியநேரம்)
இடம் - 393/48, கோயில் வீதி, நல்லூர்.

உங்கள் பதிவுகளை முன்கூட்டியே பதிந்து கொள்ளவும்.

திருமதி நளினி சிவகுமாரன் - 0777-383846
2595390
2503138
செல்வி மீரா 222-2472
0777-722056

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.